www.tamilarangam.net

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE







*TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO* **NR.10**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில குறிப்புகள்

ஒவ்வொரு மாதமும் கலை, இலக்கியங்கள், தகவல்களைத் தேடித் 'தூண்டி
போகும் எங்களுடன் உங்களையும் சேர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழை
கிறோம். தூண்டிலில் காத்திரமான, ஆரோக்கியமான, தரமான ஆக்கங்களை
சிக்க வைப்பது உங்களதும் பொறுப்பே. தூண்டிலுக்கு ஆக்கப் பஞ்சம் ஏற்ப
டாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.

தூண்டிலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்கள் முழுத் தாளின் ஒரு பக்கத்தில் மட்
டும் எழுதப்பட்டிருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை அனுப்புபவர்கள் தங்
களுடைய சொந்தப் பெயர், முகவரிகளைத் தெளிவாக எழுத வேண்டும்.
சொந்தப் பெயரிலா, புனை பெயரிலா ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட வேண்
டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

உங்கள் ஆக்கங்களுக்கான தலைப்புகளையும், பிரசுரிக்க வேண்டிய பெயரை
யும் நீங்களே அழகான கையெழுத்தில், பொருத்தமான அளவுகளில் எழுதியனு
ப்பலாம். உங்கள் ஆக்கங்களுக்கான சித்திரங்களையும் நீங்களே வரைந்து
அனுப்ப்லாம்.

தூண்டிலில் இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் சிறுகதை, கவிதை போன்
ற குறிப்பிட்ட பகுதிகள்தான் தொடர வேண்டும் என்றில்லை. உங்கள் மனதில்
தோன்றும் புதிய அம்சங்களையும் அனுப்பி வையுங்கள். பொருத்தமானவை
நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு நகரங்களிலுமிருக்கும் தூண்டில் வாசகர்கள் தாங்களே நிருபர்க
ளாக மாறி தங்கள் நகரில் நடக்கும் செய்திகளையும், தமிழர்களுடன் சம்ப
ந்தப்பட்ட தகவல்களையும் அனுப்பி வைக்கலாம். இதே போல் ஏனைய
நாடுகளிலுள்ள வாசகர்கள் தங்கள் நாடுகளின் செய்திகள், அங்கிருக்கும் ஈழ
த்தமிழர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி எழுதியனுப்பினால் ஏனைய தூண்டில்
வாசகர்களும் இந்த விடயங்களை அறிந்து கொள்வார்கள்.

தூண்டிலைப் படிப்பதுடனும், ஆக்கங்களை அனுப்புவதுடனும் மட்டும் நின்று விட
மல் தூண்டிலைப் பற்றிய முழுமையான விமர்சனங்களையும் அனுப்பி வையுங்
கள். தரமான ஆக்கங்களைப் பாராட்டி ஊக்குவிப்பதுடன், தவறுகளைச் சுட்
டிக் காட்டி திருத்துவதும் உண்மையான வாசகரின் கடமையாகும்.

வாசகர்களின் ஆர்வம் சஞ்சிகை வளர்ச்சிக்கு அவசியமாகும்.

– கடலோடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதம் எங்கே?

இந்தக் கேள்வி எழ வேண்டிய நேரம் இப்போதல்ல. எப்போதோ கேட்க வேண்டியதை இப்போது கேட்பது எமது தவறுதான் என்பதை எவ்வித போலிச் சாட்டுகளும் சொல்லாமல் ஏற்றுக் கொள்கிறோம். அப்போதே செய்யவில்லையென்பதால் இப்போதும் மௌனமாக இருக்க நாம் விரும்பவில்லை.

இன்றைய கால கட்டத்தில் ரத்தம் சிந்தாமல் போராட்டம் நடைபெறுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் எதற்காக ரத்தம் சிந்தப்படுகிறது என்பது முதலாவது கேள்வி. ரத்தம் தானாகச் சிந்தப்படுகிறதா? அல்லது சிந்த வைக்கப்படுகிறதா? என்பது இரண்டாவது கேள்வி. ஈழத்தில் தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள்தான் இந்தக் கேள்வியை எழுப்புகின்றன.

சிறு துளிகளாக ஈழப் போராட்டம் ஆரம்பமாகி 1983இலும் அதற்குப் பின்பும் திடீர் அபரிமித 'வளர்ச்சி'யடைந்து இன்று விடுதலை இயக்கங்களின் 'கொள்கை விற்பனையால்' கொச்சைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந் நிலையில் போராட்டத்தை மறு சீரமைக்க, புதிய வடிவம் கொடுக்க, முன்னெடுத்துச் செல்ல முனையும் புத்தி ஜீவிகள், விடுதலை வேட்கை கொண்டவர்கள், ஈழ மண்ணை நேசிப்பவர்கள் எல்லோரும் ஆயுத அராஜகங்களினால் அடக்கப்பட்டு, போராட்டமே இன்று முடக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் தலைமை யாருக்கு என்ற கேள்விக்காக நடக்கும் இழுபறி, சண்டைகள், பேரங்கள் தொடர்வதால் தொடர்ந்தும் ரத்தம் சிந்தப்படுகிறது. அநியாயமான முறையில் சிந்த வைக்கப்படுகிறது.

படிப்பென்று சிலரும், பணமென்று சிலரும் தங்களுக்காக வாழ்ந்த போதும், வசதி தேடிப் பறந்தபோதும், தங்கள் சுகங்களை உதறித் தள்ளி, உயிரைத் துச்சமாக மதித்து, காடுமேடெல்லாம் படுத்துறங்கி அடக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குமுறை இராணுவத்துடன் தீரமுடன் போராடி வீரமாக மரணித்த தமிழ் போராளிகளின் குருதியால் ஈழ மண்ணே புனிதமடைந்தது.

ஆனல் இந்தப் புனிதத்தை அழிப்பதே லட்சியமாகக் கொண்டு அநாகரிகமாக, அக்கிரமமாக, காட்டுமிராண்டித்தனமாக ஆண், பெண், போராளி என்றெல்லாம் பார்க்காமல் கொலை செய்து குவிக்கும் செயல்களினல் ஈழ மண் களங்கப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கொடுமையே இப்போதும் தொடர்கிறது.

சுந்தரத்தின் கொலையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொலைப்பட்டியல் இறைகுமாரன், உமைகுமாரன் ஊடாக இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அன்று மாற்று இயக்கம் என்ற காரணத்திஞல் பலர் மண்ணுக்குள் புதைக்கப்பட்டார்கள். உட் கட்சி ஜனநாயகத்தை விமர்சித்த படியால் திடீரென 'காணமல்' போனர்கள். இன்றோ இயக்க உறுப்பினராக இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன ஏதோ ஒரு காரணம் சொல்லப்பட்டு பச்சையாகப் படுகொலை செய்யப்படுகிறர்கள். அன்று வெளியே தெரிய வந்த கொலைகளுக்கு (மட்டும்) 'வீரமாக' உரிமை கோரியவர்கள் இன்று 'இனம் தெரியாத நபர்'களாகி விட்டார்கள். இவர்கள் 'நியாயம்' சொல்லிக் களைத்து விட்டார்களா? அல்லது நியாயம் கேட்க யாருமேயில்லை என்ற உண்மையைத் தெரிந்து கொண்டுவிட்டார்களா?

ஒருவர், இருவரென ஆரம்பித்த கொலை 'ரெலோ' இயக்க அழிப்பின்போது பல நூறுகி, பகிரங்கமாகி இன்று நாள் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது மூன்று படுகொலைகள் என்ற வீதத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆரம்பத்திலும், இடையிலும் ஏன் இப்போதும் கூட கண் முன்னல் நடக்கும் கொலைகளைப் பார்த்தும் நியாயம் கேட்க முயலாத, கண்டிக்க முயலாத, தடுக்க முயலாத பலரும் இன்று 'தைரியம்' வந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றும் நடவடிக்கைகளில் 'ஆவேசமாக' இறங்கி விட்டார்கள். இப்போதாவது இந்தத் 'தைரியம்' வந்தது பாராட்டப்பட வேண்டியதும், வரவேற்கப்படவேண்டியதுமாகும். ஆனல் இன்றும் கூட தங்களைச் சுற்றி நடக்கும் காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளைக் கண்டு கொள்ளாமல் இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை மட்டும் அவதானித்துக் கொண்டிருப்பதேன்? அப்படியானல் இந்திய இராணுவத்தை எதிர்த்து நடவடிக்கைகள் எடுப்பதற்கான தைரியம் விலை கொடுத்து வாங்கப்பட்டதா? அல்லது பலவந்தமாக ஊட்டப்பட்டதா?

அரிசியுடன் வந்த இராணுவம் தனது சொந்த நாட்டு நலன்களுக்காக ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறி செய்து வரும் படுகொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை, பாலியல் பலவந்தங்களை, சித்திரவதைகளை எதிர்ப்பது நியாயமானதே. ஆனால் ஒரே அடக்குமுறையின் கீழ் அடக்கப்பட்டிருக்கும், அராஜகங்களை, அரச, இராணுவ பயங்கரவாதங்களை முகம் கொடுக்கும் தமிழ்ச் சகோதரர்களை கொலை செய்யும் நீசத்தனத்தை கண்டு கொள்ளாமல் இருப்பது என்ன நியாயம்?

தூண்டிலின் நடுப் பக்கங்களில் அமைந்துள்ள செய்திக் குறிப்பு பகுதியில் இடம்பெறும் படுகொலைகளைப் பட்டியல் போட்டால் எண்ணிக்கையைப் பார்த்து மயக்கம்தான் வரும். சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற வரிகளை தட்டெழுத்தாக்க விரல்கள் பழக்கப்பட்டுவிட்டன என்று செய்திக் குறிப்புப் பகுதியை தட்டெழுத்தாக்குபவர் தெரிவித்தார். வீரகேசரிக்குக் கிடைக்கும் கொலைகள்தான் அந்தப் பகுதியில் இடம் பெறுகின்றன. இன்னும் எத்தனையோ கொலைகள் 'தெரியாமல்' நடக்கின்றன.

ஒவ்வொரு ஈழத் தமிழருக்கும் ஏதோ ஒரு முத்திரை சுலபமாகக் குத்தப்படுகிறது. ஏதோ ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர், ஏதோ ஒரு இயக்கத்தின் ஆதரவாளர், இயக்கங்களை விமர்சிப்பவர், அரசியல் கதைப்பவர்... இப்படி ஏதோ ஒரு பெயரில் ஒவ்வொருவரும் கொலைசெய்யப்படுகிறார்கள்.

சமீபத்தில் ஈழத்திலிருந்து ஜேர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோரி வந்த சில தமிழ் நண்பர்கள் சொன்ன தகவல்கள் திடுக்கிட வைக்கின்றன. பேனாவைத் தூக்கி தைரியமாக எழுத முற்படுபவர்கள், புத்தி ஜீவிகள் எனக் கருதப்படுபவர்கள் ஆகியோருக்குச் செய்யப்படும் சித்திரவதைகள் அதிர்ச்சியளிக்கின்றன. இப்படியானவர்களைப் பிடித்து மொட்டையடித்து, தலையில் ஐஸ் நீரைத் துளித்துளியாகக் கொட்ட வைக்கிறார்களாம். நான்காம், ஐந்தாம் துளிகளின்பின் கோடரி கொத்துவது போன்ற வலியை ஏற்படுத்தும் இத்துளிகள் ஈற்றில் இந்தச் சித்திரவதையை அனுபவிப்பவரின் மூளையையே மழுங்கடித்து விடுகின்றனவாம். இதன்பின் இவர்கள் முழுப் பைத்தியங்களாக நடமாடுகிறார்களாம். இதே போல கைகளை வெட்டுதல், கால்களை வெட்டுதல் போன்ற சித்திரவதைகளும் நடக்கின்றன. இவற்றை செய்வது இராணுவமல்ல. விடுதலைக்கென்று சொல்லி ஆயுதமேந்திய சில கும்பல்கள்தான்.

இராணுவம் அப்பாவி மக்களைக் கொலை செய்தால் அது பயங்கரவாதம், அட்டூழியம், அராஜகம், என்று அழைக்கப்படுகிறது. உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் விடுதலைக் குழுக்களும் இதையே செய்தால் அதற்கு என்ன பெயர்?

கிழக்கு மாகாணத்தில் தனது குழந்தையுடன் படுத்திருந்த தாயை 'இனம் தெரியாதவர்கள்' சுட்டுக் கொன்றார்கள் என்று மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தி வந்திருக்கிறது. அந்தத் தாயின் மகன் போட்டி இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதாலேயே மாற்று இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஆங்கிலப் பத்திரிகை விபரம் எழுதுகிறது. பின் ஆளை ஆளைக் கொலை செய்து முடித்து இப்போது பெற்றவர்கள் மேல் கைவைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

விடுதலைக்காகத் தியாகம் செய்யப்பட்ட உயிர்கள் போக இப்போது பலவந்தமாக, அநியாயமாக பறிக்கப்படும் உயிர்களைப் பார்த்து ஈழத்திலிருப்பவர்கள் திகைத்துப் போய் நிற்கிறார்கள். மண்ணுக்குள் போக விரும்பாமல் மௌனியாகிவிட்டார்கள். பிரஜைகள் குழுக்கள் கலைக்கப் படுகின்றன. சமூக சேவையாளர்கள் வீட்டுக்குள் முடங்கிவிட்டார்கள். இளைஞர்களோ இன்றும் 'பிராங்பேட்', 'ரொறன்ரோ' இறங்கும் நேரத்தை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கேயிருந்து ஒப்பாரி வைப்பதால் அங்கேயிருப்பவர்கள் தங்களுடைய 'கொலைத் தொழிலை' விடுவார்களா என்று கேட்கலாம். அவர்களை ஊக்குவிக்கும் சக்திகள் அந்நிய நாடுகளில் இருப்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. கொலைகாரர்களுக்குத் தேவையான பணம் ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள தமிழர்களில்தான் வழங்கப்படுகிறது.

தாழ்வு மனப்பான்மையால் அல்லது 'ஏதாவது செய்ய வேண்டுமென்ற' விருப்பத்தினால் அல்லது ஈழத்தில் 'ஏதாவது' நடந்து கொண்டிருந்தால்தான் இங்கே சுகபோகங்களை அனுபவிக்கலாம் என்ற காரணங்களுக்காக 'தாராளமான' நிதியுதவி செய்து ஈழத்தில் நடக்கும் கொலைகளுக்கு உற்சாகமளிப்பவர்கள் சிந்திக்க வேண்டும். இங்கே கொடுக்கும் பணத்திற்கு அங்கே குண்டுகள் வாங்கப்படுகின்றன. கத்திகள் தீட்டப்படுகின்றன. 'இனம் தெரியாத நபர்கள்' தமக்கு வேண்டாதவர்களையெல்லாம் தீர்த்துக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இங்கே பணம் வாங்குபவர்கள் அங்கே ஆயுதம் தூக்குவதில்லை. அதனால் 'விபரம்' தெரியாத துப்பாக்கிகள் பணத்தைக் கொடுத்தவர் வீட்டுப் பக்கமும் திரும்பலாம்.

நிதி தேடி வருபவர்களிடம் இந்தப் படுகொலைகளைப் பற்றிக் கேளுங்கள். எங்களுடைய சகோதரர்களைக் கொல்ல நாங்களே உற்சாகமளிக்க முடியாது என்று திடமாகச் சொல்லுங்கள். குறுகிய வட்டத்திற்குள் நின்று எதையும் பார்க்க முடியாத அவர்களுக்கும் முடிந்தால் இந்தப் பயங்கரத்தைப் பற்றிப் புரிய வையுங்கள்.

ஈழப் போராட்டத்தில் எந்தவிதத்திலும் பங்கெடுக்காமல் புறமுதுகுகாட்டி ஓடிவந்து தவறைத்தான் செய்துவிட்டோம். இவ்வளவு காலமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வளவோ அழிவுகளைச் சந்தித்து உருக்குலைந்து போன தமிழ்ச் சமுதாயத்தை மண்டையோடுகளாகவும், சாம்பல் மேடுகளாகவும் ஆக்கும் பயங்கரம் தொடர்வதை தடுத்து நிறுத்தக் கூடாதா? வளரும் புதிய தமிழ்ச் சமுதாயம் இந்தப் பயங்கரமான சூழ்நிலையால் கொலை வெறியர்களாக மாறும் அபாயத்தை தடுக்கும் உணர்ச்சியாவது வரக் கூடாதா?

ஈழத்தைச் சுற்றி எல்லை போடுவதல்ல பெரிய காரியம். அந்த எல்லைக்குள் மனிதர்கள் மனிதர்களாக வாழ வேண்டும். ஈழப்போராட்டம் எந்த விதத்திலும் முடியவில்லை. சில விடுதலைக் குழுக்களால் போராட்டம் 'அடகு' வைக்கப்பட்டாலும் உரிமைகளை, சுதந்திரத்தை, விடுதலையை நேசிக்கும் உணர்வு இன்னும் பலரிடம் கொழுந்து விட்டெரிகிறது. தற்போதைய காரணிகளால் அந்த நெருப்பு இருட்டில் ஒளிந்து கொண்டாலும் நிச்சயமாக ஒருநாள் பற்றியெரியும். அதற்கான சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்த இந்தப் படுகொலைகளை தடுத்து நிறுத்துவோம். தொடரப் போகும் போராட்டத்திற்காக எம்மைத் தயார்படுத்துவோம்.

## இலக்கியச் சந்திப்பு

கேர்ண நகரத்தில் நடைபெற்ற முதலாவது இலக்கியச் சந்திப்பில் நாமும் கலந்து கொண்டோம். ஈழத்திலிருந்து பலர் அந்நியமாகிக் கொண்டு வரும் காலகட்டத்தில், அந்நிய தேசத்தில், இலக்கிய ரீதியிலான ஐக்கியத்திற்காக இந்த இலக்கியச் சந்திப்பை ஏற்பாடு செய்த அமைப்பாளர்களுக்கு எமது நன்றிகள். இச் சந்திப்பில் வாசகர்கள் பெருமளவில் கலந்து கொள்ளாதது நிறைவைத் தரவில்லை. நவம்பர் மாதத்தில் நடைபெற இருக்கும் இரண்டாவது இலக்கியச் சந்திப்பில் தூண்டில் வாசகர்கள் அனைவரும் பங்குபற்றி எம்முடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம்.

முதலாவது சந்திப்பில் பங்குபற்றிய 'புதுமை' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. பாரதிதாசன் தனது விமர்சனத்தின்போது 'அரசியல் ஏடுகள் தூண்டிலில் அறிமுகம் செய்யப்பட மாட்டாது' என தூண்டிலில் தான் வாசித்ததாகக் கூறினார். 'உண்மையிலேயே இப்படி குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு' என 'சிந்தனை' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. குமாரசாமி தெரிவித்தார். நேரமின்மை காரணமாக இவர்களுக்குப் பதிலளிக்க எமக்குச் சந்தர்ப்பம் தரப்படவில்லை.

(தொடர்ச்சி 51 ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமைதிப்படையின் அக்கிரமங்கள் சர்வதேச மனித உரிமைக் கமிஷனின் அறிக்கை:

# நாளும் தொடரும் நரவேட்டை!

சர்வதேச மனித உரிமைக் கமிஷன், இந்திய ராணுவத்தின் கோர முகத்தை —பாசிசராஜீவ் கும்பலின் தலைமையின் கீழ் கட்டவிழ்த்து விடப்படும் அரசு பயங்கரவாதத்தை— உலகுக்கு இரண்டாவது முறையாக தோலுரித்து காட்டியுள்ளது.

வழக்கம்போலவே பாசிச ராஜீவ்கும்பல் 'இவையெல்லாம் இட்டுக்கட்டப்பட்ட செய்திகள், இந்தியாவின் கௌரவத்தை சர்வதேச அரங்கில் சீர்குலைக்க வீசப்படும் அவதூறுகள்' என கூச்சம் இல்லாமல் புளுகுகிறது. ஆனால் இதுநாள் வரையில், மனித உரிமைக்கமிஷன் சுமத்தும் குற்றசாட்டுகள் பொய்யானவை என்பதற்கு எந்த ஆதாரங்களையும் உலக மக்களின் முன் வைக்கவில்லை, பாசிச ராஜீவ்கும்பல். இந்திய அமைதிப்படையின் மனிதத் தன்மையற்ற இரண்டு படுகொலைகளை இங்கு பார்ப்போம்.

சின்னய்யா குணரத்ன ராஜா, காங்கேசன் துறைமுக பகுதியைச் சார்ந்த ஆலவெட்டையைச் சேர்ந்தவர். 34 வயதுடைய விவசாயி. கடந்த ஜனவரி மாதம் 29ஆம் தேதி காலைப் பொழுதில் மூன்று நட்சத்திர அணி எனப்படும் இந்திய ராணுவத்தின் கைக்கூலி அமைப்பைச் சார்ந்த ஒருவன் சின்னய்யா வீட்டிற்கு சென்றிருக்கிறான். குற்றப்பட்டியலில் இருக்கும் எல்.டி.டி.இ உறுப்பினர்களைப் பற்றியான தகவல் அறிய இந்திய ராணுவத்தினர் சின்னய்யாவை அம்பனை முகாமுக்கு அழைத்துவர சொன்னதாக கூறியிருக்கிறான்.

ஓய்வு பெற்ற போலீசு இன்ஸ்பெக்டரான சின்னய்யாவின் தகப்பனார் பதறிபோய், மகனை உடனடியாக அம்முகாமுக்கு தம்முடன் அழைத்துச் சென்று அங்கிருந்த ராணுவ அதிகாரிகளிடம் விபரம் கேட்டிருக்கிறார். இந்திய ராணுவஅதிகாரிகள் பொறுப்பான எந்தபதிலும் சொல்லாமல் சின்னய்யாவை பிடித்து வைத்துக் கொண்டனர். தெள்ளிப் பளை முகாமுக்கு கடத்திச் சென்றிருக்கின்றனர். பின்னாலேயே சென்ற சின்னய்யாவின் தகப்பனாரை, தெள்ளிப்பளை முகாமில் இருந்த இந்திய ராணுவ அதிகாரிகள் 'மறுநாள் வந்து பார்க்கும்படி' கூறியிருக்கின்றனர்.

மறுநாள் சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. யாருமே சரியான பதில் சொல்லவில்லை. அங்கிருந்து மல்லாகம் இந்திய ராணுவ முகாமுக்கு தம் மகனை கொண்டு சென்றிருப்பதாக அறிந்து அங்கு சென்று விசாரித்திருக்கிறார். எந்த பதிலும் இல்லை. தொடர்ந்து 5நாள் முயற்சித்தும் அவருக்கு தம் மகனைப் பற்றி எந்த விபரமும் கிடைக்கவில்லை.

தொடர்ந்த முயற்சிக்கு பிறகு தம்மகனை தெல்லிப்பாளை ராணுவ முகாமில் சிறை வைத்திருக்கும் தகவல் அறிந்துஅங்குசெல்கின்றனர். கட்டுறுதியான உடல்வாகுடைய அவரது மகன் இரண்டு ராணுவ வீரர்களால் தூக்கிவரப்பட்டு முகத்தை காண்பித்திருக்கின்றனர். அவரால் சுயமாக ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாதவாறு அவரது உடம்பை கொத்திக் குதறியிருக்கின்றன இந்திய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராணுவ மிருகங்கள். கணுக்கால், பாதங்கள், கால் விரல்கள், முழங்கை, மணிக்கட்டு, கை விரல்கள் அனைத்தும் நசுக்கப்பட்டு தாறுமாறாக வீங்கிப்போய் தொங்கியிருக்கின்றன.

சின்னய்யாவை அந்தக் கோலத்தில் கண்ட குடும்பத்தினர் அலறிபோய் தம்மகனை விடுதலை செய்யுமாறு கெஞ்சியிருக்கின்றனர். ஆனால், இந்திய ராணுவ மிருகங்கள் கொஞ்சமும் குற்ற உணர்வு இல்லாமல் திமிராகவும் தடலடியாகவும் அவர்களது கோரிக்கையை மறுத்திருக்கின்றனர். பிறகு ஒருவழியாக, தினமும் பார்ப்பதற்கு அனுமதி வாங்கி சித்திரவதையால் சிறுக சிறுக சாகும் தம் மகனை 10 நாட்கள் தொடர்ச்சியாக சென்று கவனித்திருக்கின்றனர். பார்க்கப் போகும் போதெல்லாம் தம்மகனுக்கு சிறிது உணவும் மருந்தும்தெரிந்தும் தெரியாமலும் கொடுத்து ஆறுதல் அடைந்திருக்கின்றனர். அதையும் இந்திய ராணுவ மிருகங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதன்பிறகு தம்மகனைப் பார்க்கவும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

நான்கு நாட்கள் கழித்து ஒரு இந்திய ராணுவ வீரன் வந்து ராணுவ அதிகாரிகள் அவர்களை தெல்லிப்பளை ராணுவ முகாமுக்கு வரச்சொன்னதாக தகவல் சொல்லியிருக்கிறான். முகாமுக்கு சென்ற சின்னய்யாவின் பெற்றோர்களுக்கு ஒரு பேரிடி காத்திருந்தது. "சின்னய்யா இறந்து விட்டான்" என்று சாதாரணமாக கூறிவிட்டு வெள்ளைத் துணியால் மூடப்பட்ட சின்னய்யாவின் உடலை ஒப்படைத்தனர். அங்கு பிரித்து பார்க்கவும் அனுமதிக்கவில்லை.

திரும்பும்போது, உடலை ஒப்படைத்ததற்கு அவர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, சின்னய்யா இறந்து போனதற்கு ஒரு இறப்பு சான்றிதழையும் கொடுத்திருக்கிறது 'சத்தியம்' தவறாத இந்திய ராணுவம். "சுகவீனத்திலிருந்து மீட்க நரம்பூசி போட்டதாகவும், எதிர்பாராமல் இறந்து விட்டதாகவும். மற்றபடி அவரது உடம்பில் எந்த காயங்களும் இல்லை" எனசத்தியம் செய்திருக்கிறது.

ஆனால், சின்னய்யாவின் இறுதிச் சடங்கின்போது எடுக்கப்பட்டபுகைப்படங்கள், இந்திய ராணுவத்தின் அக்கிரமங்களுக்கு இப்போது சாட்சி பகர்கின்றன. உடலை மருத்துவ பரிசோதனைக்கு கொடுக்காமலேயே சிங்கள மருத்துவ அதிகாரியை நிர்பந்தித்து, இந்திய ராணுவம் இறப்பு சான்றிதழ் வாங்கியது இப்போது ஆதாரத்துடன் அம்பலத்திற்குவந்துள்ளது.

● ● ●

கனகலிங்கம்நாதன்: வயது 86. உடுவில் கிராம கவுன்சில் அலுவலகத்தில் இரவு நேரக் காவலராக பணிபுரிந்து வந்தவர். ஏற்கனவே, சிங்கள ராணுவத்தால் '81ஆம் ஆண்டு இறுதியில் கைது செய்யப்பட்டு 6 மாதத்திற்கு பிறகு விடுதலைச் செய்யப்பட்டவர். இதையே காரணமாக வைத்து கைது செய்திருத்கிறது இந்திய ராணுவம்.

கடந்த டிசம்பர் 29ந்தேதி பகல் பொழுதில் அவருடைய சொந்த ஊரான இனுவில் கிராம குடிமக்கள் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலையில் அவரை பலவந்தமாக இழுத்துச் சென்றிருக்கிறது.

இரண்டு நாள் கழித்து அவர் மருதனாமடம் இந்திய ராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டிருப்பதை அறிந்து அவரது குடும்பத்தினர் அங்கு சென்றிருக்கின்றனர். அவர்களிடம் மறுநாள் பகல் 1 மணிக்கு வந்து பார்க்கும்படி கூறியிருக்கிறது, இந்திய ராணுவம். அதன்படி மறுநாள் சென்றவர்கள் நாதனை பார்க்கஅனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போது அவர் நல்ல உடல் நிலையில் இருந்திருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'உடுத்துவதற்கு தனக்கு மாற்றுத்துணிகள் இல்லையென்றும் வீட்டிலிருந்து தனது உடைகளை கொண்டு வருமாறும்' பெற்றோர்களிடம் கூறியிருக்கிறார். அடுத்தநாள் துணிகளுடன் சென்றவர்களை பார்க்க அனுமதிக்காமல், துணிகளை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு திருப்பி அனுப்பியிருக்கிறது, இந்திய ராணுவம். இதைத் தொடர்ந்து 10 நாட்களுக்கு மேலாக அவர்களைப்பார்க்கவே அனுமதிக்கவில்லை. 'விசாரணை முடிந்தால் தாங்கள் சொல்லியனுப்பவதாகவும், அது வரை யாரும் முகாமுக்கு வரக் கூடாது' என்றும் அவர்களை மிரட்டி அனுப்பியிருக்கிறதுஇந்திய ராணுவம்.

ஜனவரி 16ந்தேதி, நாதன் ராணுவ முகாமில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக வெளியில் வந்தவர்கள் சிலர் சொல்ல, பெற்றோர்கள் முகாமுக்கு சென்றுவிசாரித்திருக்கின்றனர். ராணுவ அதிகாரிகள், "அவர் ஏற்கனவே இறந்துவிட்டாரே"என நக்கலாக கூறி "என்ன? உடலை எடுத்துச் செல்ல போகிறீர்களா?" என திமிராக கேட்டிருக்கின்றனர். அலறிய பெற்றோர்கள் "நாதன், எப்படி இறந்து போனான்" என கண்ணீர் மல்க கேட்டதற்கு "சாவதற்கு நேரம் வந்தது! செத்துப்போனான்" என்றுகிண்டலாக பதில் சொல்லியிருக்கின்றன ராணுவ மிருகங்கள்.

வழக்கம்போலவே அவர்கள் கையிலும் இறப்பு சான்றிதழைக் கொடுத்திருக்கின்றனர். வயிற்றுப் போக்கால் நாதன் மூன்று நாட்களாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், நிலைமை கடுமையானவுடன் அருகில் இருக்கும் கொக்குவில் மருத்துவ முகாமுக்கு எடுத்துச் சென்று நரம்பு மூலம் சத்துநீர் செலுத்திய போது திடீரென அவரது நாடிதுடிப்பு நின்று விட்டதாகவும் ஒரு சோகக் கதையை எழுதிக் கொடுத்திருக்கின்றனர்.

ஆனால், நாதனின் உடல் முழுக்க திட்டு திட்டாக தீய்ந்து போனதற்கான அடையாளங்கள் இருந்திருக்கின்றன. 'மின்சாரம் பாய்ச்சிய கம்பியின் மூலம் உடம்பு முழுவதும் சுட்டதற்கான காயங்கள்தான் அது' என பார்த்தவர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். மேலும் அவரது இடது தோள் பட்டையின் மூட்டு கழண்டுப் போய் வீங்கியும், இரண்டு கால் முழுக்கவும் பின் பகுதியிலும் காயங்கள் இருந்திருக்கின்றன.

ஒன்று இரண்டல்ல, பலபத்து நூறு படுகொலைகள் தினம் தினம் ரகசியமாக இந்திய ராணுவத்தால் அரங்கேற்றப்படுவதாக சர்வதேச மனித உரிமைக் கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது. டிசம்பர் 87 லிருந்து ஜனவரி 88 வரை இவ்வாறான படுகொலைகள் கணக்கு வழக்கற்ற முறையில் நடந்ததாக மனிதஉரிமைக் கமிஷன் பட்டியலிடுகிறது. ஒருவர் இந்திய ராணுவத்தால் கைது செய்யப்பட்டால், அதன் பிறகு அவர் காணாமல் போவதும், சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்படுவதும் சர்வசாதாரணமாகி விட்டது என்று கூறுகிறது.

இதே போல, சொந்த நாட்டில் அமைதி ஏற்படுத்துவது என்ற பெயரில், மதவெறி பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் அப்பாவி சீக்கிய மக்களை கைது செய்வதும், சித்திரவதை செய்து படுகொலை செய்வதும், கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவதும் நாளுக்கு நாள் அதிகமாகி விட்டது என அடுத்தடுத்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது சர்வதேச மனித உரிமைக் கமிஷன்.

● பச்சையப்பன்

நன்றி: புதிய ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரியுமா?

01. அன்னை திரேசா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
02. வயலின் இசைக்கருவி முதன்முதல் எங்கே தோன்றியது?
03. எதிரொலி மூலம் இரையைத் தேடும் பிராணி எது?
04. புத்தபெருமான் பிறந்த நாடு எது?
05. தாமரை இலைகளில் தண்ணீர் ஒட்டாமலிருப்பது ஏன்?
06. இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தான் எப்போது பிரிந்தது?
07. உலகப் பிரசித்திபெற்ற ஓவியர் பிக்காசோ எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
08. கண்டியைக் கடைசியாக ஆண்ட தமிழ் மன்னனின் இயற்பெயர் என்ன?
09. தேனீர்அருந்தும்பழக்கம் எங்கு எப்போது தோன்றியது?
10. கீதாஞ்சலி என்ற இலக்கியப்படைப்புக்கான நோபல் பரிசைப் பெற்றவர் யார்?

விடைகள்

01. அல்பானியா.
02. இந்தியா.
03. வெளவால்.
04. நேப்பாளம்.
05. தாமரை இலையில் கியூற்றின் இருப்பதால்
06. 1918ம் ஆண்டு.
07. ஸ்பெயின்
08. கண்ணுசாமி.
09. சீனவில், கிபி 500ல்
10. ரவீந்திரநாத தாகூர்.

www.tamilarangam.net

**படித்தல்**

ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

—மெகாலே



## வாசகர் கடிதங்கள்

'ஈழத் தமிழரின் இலக்கிய ஆர்வம்' என்ற தலைப்பில் எழுதிய ஆசிரியர் கருத்து வெகு சிறப்பாக, உண்மையை உறுதிப்படுத்துவதாக இருந்தது. நல்ல சிந்தனையின் வெளிப்பாடுகளுக்கு எழுத்துருவம் கொடுத்த ஆசிரியர் குழுவிற்கு எமது பாராட்டுகள். ஒளசி எழுதிய 'பசி' என்னும் சிறுகதை மீனவ வாழ்க்கையையும், நாட்டுப் பிரச்சனைக்குள் அவர்கள்படும் அவல நிலையையும் நன்கு படம் பிடித்துக் காட்டியது. கதைக்கருவால் இன்று நம் நாட்டில்படும் வேதனைகள் சொல்லில் அடங்கா.

நான் எழுதிய 'ஊனமுற்ற மனம்' என்ற சிறுகதையின் கருத்துள்ள கதையை ஈழத்தில் 'சுடரில்' தான் வாசித்தாக ஞாபகம் என நோர்வேயிலிருந்து ஒரு வாசகர் எழுதியுள்ள விமர்சனத்தை வாசகர் கடிதம் பகுதியில் பிரசுரித்துள்ளீர்கள். சந்தேகம், ஞாபகம் எனக் குறிப்பிட்டு எழுதியதைப் பிரசுரித்தால் ஆக்கத்தைப் படைத்தவருக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்று உணரவில்லையே. நான் ஜேர்மனியைப் பகைப்புலமாக வைத்து, ஓர் உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டே அவ்வாக்கத்தைப் படைத்தேன். ஈழத்தில் சுடரில் வந்த கதைக்கும் எனது கதைக்கும் எதுவிதத்திலும் சம்பந்தமில்லை. ஜேர்மனியில் வாழும் கதாபாத்திரம், பெண்களை நசுக்கும் சமுதாயம், ஆணினம் என்பவற்றைப் பின்னிப் பிணைந்தே ஆக்கிய எனது சொந்தப் படைப்பு. இதைச் சுடரில் வாசித்த ஞாபகம் எனும்போது அதன் பிரதியே இது என்ற பொருளில் நீங்களும் பிரசுரித்துள்ளீர்கள்.

சமுதாயப் புரட்சியை முன்னெடுத்துச் சென்று சீர்திருத்தம் காணமுனையும் தூண்டில் சந்தேகத்தையும், ஞாபகத்தையும் வளர்த்துச் செல்லுமாறல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கே வதந்திகளுக்கும் இடமளிக்கப்படலாம் என என்ன இடமுண்டு.

விமர்சனம் செய்த வாசகர் தி.தயாநிதிக்கு சுடரில் வாசித்த ஞாபகம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு அதைப் பிரசுரித்த ஆக்கதாரருக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தி விட்டீர்கள். உண்மையான பத்திரிகைத் தர்மப்படிசுடர் எத்தனையாம் ஆண்டு? எந்த மாதம்? யார் எழுதிய கதை? என்பவற்றை நீங்கள் அறிந்த பின்னரே அது உண்மையாயிருக்கலாம் எனப் பிரசுரிக்கலாம். தயவு செய்த இதன் விபரத்தை அந்த விமர்சகரிடமிருந்து அறிந்து எனக்குத் தெரியப்படுத்தினால் எனக்கு உதவியாயிருக்கும்.

டோற்முண்ட் விக்னு பாக்கியநாதன்

'ஊனமுற்ற மனம்' கதையைப் பற்றிய வாசகரின் கருத்தைப் பிரசுரித்தால் படைத்தவருக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்று உணரவில்லையென்றும் இது சுடரில் வெளிவந்த கதையின் பிரதி என்ற பொருளிலேயே பிரசுரித்துள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

உங்கள் கதையைப் பற்றிக் குறிப்பிட்ட வாசகர் தனது சந்தேகத்தை அல்லது ஞாபகத்தை தனக்குள்ளேயே வைத்திருக்காமலும், அநாகரிகமான முறையில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமலும் பகிரங்கமாக எழுதியிருப்பது அவருடைய விமர்சன நேர்மையைக் காட்டுகிறது. இதற்கு உரிய மதிப்புக் கொடுக்காமல் அவருடைய கருத்தை பிரசுரிக்காமல் மறைப்பது அவருடைய சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் என்பதுடன் ஆக்கத்தைப் படைத்த உங்கள் மீதே எங்களுக்கு நம்பிக்கையில்லையென்றாகிவிடும். ஆக்கங்களை பகிரங்கமாக வெளிப்படுத்தும் நீங்கள் அவற்றுக்கான விமர்சனங்களையும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே இலக்கிய வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாகும். உங்கள் மனதைப் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அந்த வாசகர் கடிதம் பிரசுரிக்கப்படவில்லையென்பதை இனி நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

சுடரில் வெளிவந்த கதையைப் பற்றிய விபரங்களை வாசகர் தி.தயாநிதி எமக்குத் தெரியப்படுத்துவாரென எதிர்பார்க்கிறோம்.

— கடலோடிகள்.

'இந்திய ஆக்கிரமிப்பும் ஈழப் போராட்டமும்' என்ற எனது கட்டுரையின் மேல் வைக்கப்பட்ட விமர்சனங்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறேன். முதலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறீரங்கனின் விமர்சனத்திற்கான பதில். 'வரலாறு கண்ட யுத்தங்கள் யாவும் வர்க்கங்களிற்கு இடையிலான யுத்தம்' என்பது மாக்ஸிஸ அணுகுமுறை. சமுதாயத்தில் காணப்படும் முரன்பாடுகளுக்கான அடிப்படைக் காரணங்களைத் தேடுமிடத்து அங்கே வர்க்கங்கள் மோதி நிற்பதை நாம் காணலாம். ஆழமாகப் பார்க்காமல் மேலோட்டமாக நாம் எமது இனத் துவேசத்தைப் பார்த்தால் 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்ற ஜே. ஆர், பிரேமதாசா போன்ற இனத் துவேசிகளின் பேச்சை மட்டும்தான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த ஆளும் கும்பலையே இயக்குகின்ற வர்க்க அடிப்படையை நாம் பார்க்க வேண்டும். எந்த ஆளும் வர்க்கத்தை இவர்கள் காப்பாற்ற முனைகின்றார்கள்? எதற்காக இவர்கள் இனத்துவேசத்தை வளர்க்கிறார்கள்? என்று ஆழமாகப் பார்க்க வேண்டும். அப்படி நாம் ஆழமாகத் தேடுமிடத்து இது இவர்களது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளிலிருந்து எழுவது அல்ல என்பதையும், எந்த ஆளும் வர்க்கத்திற்கு அடிவருடியாக இருந்து சேவகம் செய்ய விரும்புகின்றார்களோ அந்த ஆளும் வர்க்கத்தைக் காப்பாற்றவே இனத் துவேசத்தைக் கக்குகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஐரோப்பியரால் பரப்பப்பட்ட 'ஆரியர்' என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் எருபடாமல் போனதற்குக் காரணம் அன்று சிங்கள மக்கள் கொண்டிருந்த வர்க்க அமைப்பு அதற்குக்குத் தகுந்ததாக இருக்கவில்லை என்பதே. வர்ண இனவெறியானது குறுந்தேசிய வெறியைவிட பிற்போக்கானது. இது ஒரு இனத்தில் சரியான செல்வாக்கைப் பெற வேண்டுமாயின் அந்த இனத்தின் முதலாளிகள் மிகவும் பலம் பொருந்திய ஒரு வர்க்கமாக இருக்க வேண்டும். மேலும் வர்ண இனவெறியை ஊட்டி ஸ்திரமாக வைத்திருப்பதற்கோ அன்றி சிறிதளவு வளர்ந்து செல்வதற்கோ அந்த இனத்தின் முதலாளிகள் பாசிச அரசை நிறுவ வேண்டும். ஆனால் உலக மக்களின் வளர்ச்சியானது வர்ண இனவெறி வளர்வதற்கான அடிப்படையை இன்று இல்லாமல் செய்துள்ளது. ஐரோப்பியர்கள் ஆண்டுகொண்டு 'ஆரியர்' என்ற கருத்தை சிங்கள மக்களுக்கு ஊட்ட முனைவது அவர்களுக்கே எதிரானது. அப்படி உருவாக்கவும் முடியாது. மேலும் பலமான தேசிய முதலாளிகளை அன்று சிங்கள கொண்டிராததாலேயே வர்ண இனவெறி ஏருபடவில்லை. இவர்களது வர்ண இனவெறியும், குறுந்தேசிய வெறியும் தொடர்ச்சியாக வளர்த்தெருக்கப்படவில்லை என்பதை, தமிழரை இலங்கையில் தலைவராகத் தெரிந்து பல்லக்கில் சிங்கள மக்கள் தூக்கியதிலிருந்து கண்டு கொள்ளலாம். அநாகரிக தர்மபாலாவினது கருத்து வெற்றியளிக்க வேண்டும் என்பதற்காக இந்திய, தமிழ், முஸ்லீம் வியாபாரிகளுக்கு எதிராக அவர் போராடினார். அதனடிப்படையிலேயே முஸ்லீம், சிங்கள மக்கள் கலவரம் உருவானது. ஆனால் சிங்கள தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி அன்றைய நிலையில் போதியளவு இல்லாமையினால் அநாகரிக தர்மபாலாவின் கருத்து அன்று எருபட

www.tamilarangam.net

ல்லை. அதாவது குறுந்தேசிய வெறி வளர்ச்சிக்குத் தேவையான தேசிய முத லாளித்துவத்தைவிட தரகு முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து நிற்கிறது.

இப்படி தரகு முதலாளித்துவமானது ஏகாதிபத்திய சார்பு ஆட்சியை நடாத் தியது. இந்த தரகு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் நாளடைவில் குட்டி முதலா ளித்துவ வர்க்கத்திற்கெதிராக முரண்பட்டு நிற்கிறது. இந்த முரண்பாட்டைத் திசைதிருப்பினால்தான் ஆளும் வர்க்கம் அரசாள முடியும். என்ற நிலை உருவா கியது. அதற்குச் சரியான இனத் துவேச வடிவம் கொடுக்கப்பட்டது. அது ஆரி யர் என்ற வர்ண இன அடிப்படையில் ஆனதல்ல. சிங்களவர் என்ற குறுந்தேசிய வெறியின் அடிப்படையில் ஆனதாகும்.

சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளின் வர்க்க அடிப்படையை ஆராய்ந்து அதற் கான தீர்வு கண்டபிடிக்கப்பட்டாலேயே முரண்பாடுகளைத் தீர்க்க முடியும். 'இன ஒடுக்குமுறையின் வர்க்க அடிப்படை இதுவே' என்று கூறிவிட்டு 'இந்த அடிப்படையில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாதவரை தமிழ் மக்கள் இனரீதி யாக ஒடுக்கப்படுவார்கள்' என்று சுட்டிக் காட்டியிருந்தோம்.

இந்த அடிப்படையில் போராட்டத்தையும், முரண்பாடுகளையும் ஆராய நீர் கற்றுக் கொள்ள வேண்டும். மேலோட்டமாகப் பிரச்சினையைப் பார்ப்பீரா யின் கூட்டணிக் கும்பலைப்போல அநாகரிக தர்மபாலா, பண்டாரநாயக்க போன்ற ஆளும் வர்க்கத்தின் அடிவருடிக் கும்பலை மட்டும் சாடிவிட்டு ஆளும் வர்க்கத்துடன் (அந்த வர்க்க அடிப்படையை மக்களுக்கு மறைத்து) கூடிக் குலாவுவது போன்ற துரோகமாகும்.

தமிழர்களுக்கு நன்மை', 'தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்யும் துரோகம்' என்ற உமது இன உணர்வானது சரியான ஒரு பார்வையை உமக்குத் தர மறு க்கிறது. 'ஆய்வு', 'திரிபுவாதம்' என்ற வார்த்தை ஜாலத்தின் மூலம் உமது 'சக்கையான பார்வையை' மறைக்கப் பார்க்கிறீர்.

அடுத்து மனோகரனின் விமர்சனத்திற்குப் பதில். 'போராட்டத்திற்குத் தற்காலி கத் தீர்வொன்று அவசியம் தேவை' என்று நீர் வலியுறுத்தியுள்ளீர். இன்றைய பாசிச சூழ்நிலையில் தற்காலிகத் தீர்வொன்று கிடைத்தால் அதன்போது ஒரு குறிப்பிட்ட 'ஜனநாயகச் சூழல்' கிடைக்கும் என்பது உண்மையே. அந்த ஜனநாயகச் சூழலில் புரட்சிகரச் சக்திகள் மக்கள் மத்தியில் வேகமாக வேலை செய்ய முடியும் என்பதும் உண்மையே. அது மட்டுமல்ல சகல பிற்போக்குச் சக்திகளும் பாராளுமன்ற சகதிக்குள் விழுந்து மேலும் அம்பலப்படுவார்கள் என்பதும் உண்மையே. இருப்பினும் 'தற்காலிகத் தீர்வொன்று அவசியம் தேவை' என்று புரட்சியாளர்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இருக்கும் கடி னமான—சிறிதளவு ஜனநாயகமே கேள்விக்கிடமான—சூழ்நிலைகளைக்கூட சரியாக முகம் கொடுத்துத்தான் முன்னேற வேண்டுமென்றால் புரட்சியாளர்கள் முன்னே

www.tamilarangam.net

றியாக வேண்டும். அப்படி முன்னேறும் புரட்சியாளர்களைக் கொண்ட ஸ்தாபனமே மேலும் கடினமான சூழ்நிலைகளிலும் போராட்டத்தைச் சரியாக முன்னெடுத்துச் செல்லும். சந்தர்ப்பங்கள், நிலைமைகளுக்குப் பின்னால் ஓடுபவர்கள் அல்ல புரட்சியாளர்கள். பாதகமான சந்தர்ப்பம் சூழ்நிலைகளைச் சாதகமாக மாற்றியமைக்கும் கடமைகளும் புரட்சியாளருக்கு உண்டு என்பதை நீர் புரிந்து கொள்ள வேண்டும்.

சுவிஸ்

மயூரன்

ஜா ண்டில் கலம் எட்டில் வெளியான பார்த்திபனின் 'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது' என்ற சிறுகதையில் 10ஆம் பக்கத்தில் 5ஆம் பந்தியிலிருந்து 13ஆம் பக்கத்தில் 1ஆம் பந்திவரை கதாசிரியரின் கற்பனைகள் இங்குள்ள சூழ்நிலைகளில் தவறானவை என கலம் ஒன்பதில் நிருபா தங்கவேற்பிள்ளை என்ற வாசகர் விமர்சித்திருப்பது தவறாகும். இந் நாட்டில் ஆசிரியர்கள், மாணவர்களின் பெயரைக் கூப்பிட்டு வரவைப் பதிவு செய்யும் முறையிருக்கிறது. ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருடைய வரலாற்றையும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. சக மாணவர்கள் சந்திக்கும்போது காலை, மாலை வணக்கங்களைவிட 'கலோ' என்றுதான் அதிகமாகச் சொல்லிக் கொள்வார்கள். எனவே கதையில் 'இரண்டரைப் பக்கங்கள் வீணாகப் போய்விட்டன' என்ற விமர்சனம் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

காகென் — நா. நித்யா

ஸ்ருட்காட் — உமா

கேர்ண — கரன்

காகென் — நிருபா நாகலிங்கம்

ஒரே கருத்து என்றபடியினாலும், பக்கங்கள் போதாமையினாலும் மேலே உள்ள வாசகர்களின் தனித் தனிக் கடிதங்களைச் சுருக்கி, தொகுத்து ஒன்றாகத் தந்திருக்கிறோம். வாசகர்கள் எம்மைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றோம்.

— கடலோடிகள்.


'ஈழத் தமிழரின் இலக்கிய ஆர்வம்' என்ற கட்டுரையில் ஐரோப்பாவில் வாழும் தமிழரைக் குறை கூற முடியும். ஆனால் இலங்கையில் வாழும் தமிழரின் பிரச்சினை வேறு. இலங்கை வெளிநாட்டு உற்பத்திகளுக்குச் சந்தை என்பதை

(தொடர்ச்சி 32 ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்.

26.8.88

நெடுங்கேணிப்பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மோதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

மன்னாரில் கபால்தீன் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பண்டத்தரிப்பில் வின்சன்ற் என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

மூதூரில் சத்தியசீலன் என்பவர் இனந்தெரியாதோரால் குத்திக்கொல்லப்பட்டார்.

வெள்ளவத்தையில் சாக்குமூடை ஒன்றிற்குள்ளிருந்து பிரேதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. பிரேதத்துடன் உரும்பராய் ராசகுமாரன், பரணி குரூப்பின் உளவாளி என்ற துண்டும் காணப்பட்டது. மூன்று தினங்களுக்கு முன்பும் வெள்ளவத்தையில் கன்னன் என்ற குலதீஸ்வரன், பரணி குருப் உளவாளி என்ற துண்டுடன் பிரேதம் ஒன்று சாக்குமூடைக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டது.

மூதூர் இறங்குதுறைப்பகுதியில் காணாமற் போன நா.நவரத்தினம் என்ற பட்டதாரி ஆசிரியர் பின்னர் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். ஆணுறுப்பு வெட்டப்பட்ட நிலையில் இவர் கொல்லப்பட்டார்.

இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதாகக்கூறிக் கொண்டுஅப்பாவி மக்களை நாளும் துன்புறுத்துவதுடன் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருவதாக யாழ் பிரஜைகள் குழு ராஜீவுக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளது.

27.8.88

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் உயர் வகுப்பில் படிக்கும் மாணவர்களை தமது இயக்கத்தில் சேர்ப்பதில் விடுதலைப்புலிகள் மும்முரமாக ஈடுபடுவதாகத் தகவல் கிடைத்ததையடுத்து உயர்வகுப்பில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் விபரங்களை வீடுவீடாகச் சென்று திரட்டுவதில் இந்திய இராணுவம் ஈடுபட்டுவருகிறது.

மூன்று வயது, எட்டு வயதான இரண்டு பிள்ளைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தங்காலை பொலிஸ் அதிபர் பிரிவில் அடித்தும், குத்தியும் கொலை செய்யப்பட்டனர்.

கொழும்பு புறக்கோட்டையில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த எழுதுமட்டுவாள், மிருசுவில் வடக்குக்குடியேற்றத் திட்டம், மிருசுவில் உசன் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளில் நிலைகொண்டுள்ள இந்திய இராணுவம் அப்பாவி மக்களைத் துன்புறுத்திவருகிறது.

யாழ் மாவட்டத்தில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. வீதியா செல்பவர்களை தடி, சைக்கிள்செயின் ஆகியவற்றால் இந்திய இராணுவம் படுமோச மாகத் தாக்கிவருகிறது.

15.7.88முதல் 15.8.88 வரை வடக்குக் கிழக்கில் 44 பொதுமக்கள் கொ ல்லப்பட்டதாகவும், தெற்கில் 23 அரசியற் கொலைகளும், 88 ஏனைய கொலைக நிகழ்ந்துள்ளன என்றும் பாராளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் தெ ரிவித்துள்ளார்.

## 28.8 88

மகரையில் ஊர்காவற்படையினர் 15 வயதுச் சிறுமியொருத்தியைச் சுட்டுக்கொலை செய்தனர்.

மகாஓயாப் பகுதியில் கிராமசேவகர் உட்பட 10 பேர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## 29.8 88

மாகாணசபைத் தேர்தலுக்காக வடக்குக்கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் வே ட்பாளரை நிறுத்தப்போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் அறிவித்துள்ளது.

"இந்த நாட்டின் உணவுத் தேவையில் மூன்றிலொருபகுதி உணவை கிழக்கு மாகாண விவசாயிகளே உற்பத்திசெய்கின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகால யுத்தம் காரணமாக வடக்குக்கிழக்கு விவசாயம் பாரியளவிற் பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் இந்த மண்ணிற் காலடி எடுத்துவைத்தது முதல் கிழக்குமாகாண விவசாயிகள் தம் வி வசாயத்தைத் தொடரமுடியாமல் அல்லற்படுகின்றனர். சமீபகாலமாகத் தமிழ்ப்போ ராளிகள் தம் பூமியை மீட்கப் போராடி வருகின்றனர். கடந்த 40 ஆண்டு காலமா மௌனம் சாதித்துவந்த முஸ்லீம்கள் இன்று பொறுமையிழந்து தம் பூமியில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்திற்கெதிராக குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். ஆரம்பத்தில் நாம் நினைத்தோம் முஸ்லீம்கள் வெறும் வர்த்தகர்கள்தான் என்று. ஆனல் இந்த நா ட்டை வளப்படுத்தும் விவசாயிகளும் முஸ்லீம்கள்தான் என்பதை இன்று உணர்ந்துவிட் டோம்." —அகில இலங்கை விவசாயிகள் சங்கத் தலைவர் தம்மரன்ஸி தேரோ.

பூஸா முகாமில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ்க் கைதிகள் அறுவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. ஒருவரின் உடல்நிலை படுமோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது.

இருதயபுரத்தில் அரியானந்தனும், மாமாங்கத்தில் இலங்கேஸ்வரனும், புன்னைச்சோலை யிற் பரமானந்த சிவமும், புல்லுமலையில் ஒரு வாலிபருமாக நால்வர் இனந்தெரி யாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

முறக்கொட்டாஞ்சேனையில் சமூக சேவையாளரும் ஆசிரியருமான சண்முகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறக்கொட்டாஞ்சேனையில் சமூக சேவையாளரும் ஆசிரியருமான சண்முகம் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் வீரமாகாளியம்மன் கோவிலுக்கருகில் 22 வயதான பரஞ்சோதி, 24 வயதான எம்.திருநாவுக்கரசு ஆகிய இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மல்லிகைத்தீவில் மனைவியுடன் சென்றுகொண்டிருந்த ரி.வரதராசன் என்பவர் ஆயுதபாணிகளாற் கடத்தப்பட்டு பின் சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டக்களப்பில் இந்திய இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த விஜயகுமாரன், கந்தையா மகேஸ்வரன் என்போர் தப்பிச்செல்ல முனைந்தபோது இராணுவம் சுட்டதில் கந்தையா மகேஸ்வரன் இறந்துவிட்டார்.

முஸ்லீம் இளைஞர் ஒருவர் அக்கரைப்பற்று புதுக்குடியிருப்பில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பூஸா முகாமில் விடுதலைகோரி சாகும்வரை உண்ணாவிரதமிருப்பவர்களுக்கு ஆதரவாக கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியற் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

## 30.8.88

முல்லைத்தீவு மாவட்டம் தொடர்ந்தும் வவுனியா, கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம் முதலான பகுதிகளிலிருந்து முற்றுகைத் துண்டிக்கப்பட்டுள்ளது. இங்கு முழுநேர ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டு வருகிறது.

மாத்தளையில் ஒரு கிராமசேவகரும், மொனராகலையில் ஒரு கிராமோதயத் தலைவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இராணுவம் மோதியதில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான். இன்னொரு சிறுவன் படுகாயமடைந்தான்.

கொக்கட்டிச்சோலை, கடுக்காமுனைக் கிராமத்தைச் சேர்ந்த அருளம்பலம், பெரியதம்பி ஆகிய இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## 31.8.88

தமிழ் முஸ்லீம் மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் கட்சியொன்று கல்முனையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வன்னிப்பிரிவிலுள்ள நித்திக்காய்க்குளம் பகுதியில் இந்திய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது 12 புதிதாகத் தோண்டப்பட்ட பிரேதக்குழிகளைக் கண்டுபிடித்தனரென்றும் அவற்றில் 12 பிரேதங்கள் காணப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் முழுநேர ஊரடங்குச்சட்டம் காரணமாக உணவுப்பஞ்சத்தால் இப்பகுதியிலுள்ள மக்கள் துன்பப்படுகின்றனர்.

www.tamilarangam.net

திருகோணமலையில் சிங்கள் மீனவர்களை இந்திய இராணுவம் கைதுசெய்து தாக்கியதாகவும், படகுகள் சேதமாக்கப்பட்டு வலைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

**2.9.88**

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் புறப்பட்ட வாகனமொன்றை ஆனையிறவில் இந்தியப்படையினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதில் 60 வயதான வயோதிப மாது ஒருவரின் பெட்டியிலிருந்து வெடிமருந்துப் பொதியைக் கைப்பற்றியுள்ளனர்.

தங்களை அரசியற் கட்சிகளாக அங்கீகரிக்கக்கோரி டெலோ, ஈ.என்.டி.எல்.எவ் புளொட் இயக்கங்கள் தேர்தல் ஆணையாளருக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளன.

பூஸா இராணுவமுகாமில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் மூன்று அரசியற் கைதிகளுடன் மேலும் 18 பேர் சேர்ந்துகொள்கின்றனர். இவர்களின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து வடக்கிலும், கிழக்கிலும் உண்ணாவிரதங்கள் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் எஸ்.பாஸ்கரன் என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மாசியம்பிட்டியிலும் ஒருவர் கொல்லப்பட்டார்.

வடக்கில் பகல் நேரங்களில் கொலைகளும், ஊரடங்கு வேளைகளில் கொள்ளைகளும் நடைபெறுவது இப்போது வழக்கமாகிவிட்டது.

**3.9.88**

மட்டக்களப்பில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு தேடுதல் நடவடிக்கை நடைபெறுகிறது.

இராமேஸ்வரத்திலிருந்து கப்பல்மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த 547 அகதிகளுக்கு உணவுப்பொருட்கள், சமையற்பாத்திரங்கள் போன்ற எந்த நிவாரணப்பொருட்களும் வழங்கப்படாததால் அகதிகள் பெரும் அவதிப்படுகின்றனர்.

மகியங்கனையிலும், கல்முனையிலும் இரு கிராமோதயத் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**4.9.88**

வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்துமுன் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அம்மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? என்பதை அறியவேண்டும். என்றும் ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டால் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு தங்களது கிளர்ச்சியை கைவிட வேண்டுமென்றும் தமிழக அறிஞர் கி, ஆ.பெ.விஸ்வநாதம் கூறுகிறார்.

"இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினால் இந்தியாவுக்கு வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படுமென்ற அச்சத்தின் காரணமாக இந்தியா சமாதான ஒப்பந்தத்திற்கு தாமாகவே முன்வந்து கைச்சாத்திட்டது"—சிறிமா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5.9.88

நாவற்குடாவில் இந்திய இராணுவம் நடாத்திய தேடுதல்வேட்டையின்போது மகேசுரன் என்பவரையும், சரோஜா என்ற பெண்ணையும் சுட்டுக்கொன்றனர்.

"இந்தியப்படைகள் இலங்கை சென்று ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பிப்பது எப்படி? இந்த அம்சம் சிவில் நிர்வாகத்திற்குக் கீழ் வருவதால் ஊரடங்கு பிறப்பிக்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை. இலங்கைத் தமிழருக்கெதிராக இந்தியப்படைகள் இழைத்திருப்பதாகக்கூறப்படும் புகார்கள்பற்றி விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டின் மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று அங்கு அனுப்பப்படவேண்டும்." -ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதியரசர் திரு வி.ஆர்.கிருஸ்ண ஐயர்.

6.9 88

இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்ட பிரேமன், பாஸ்கரன் ஆகிய இருவர் தப்ப முயற்சிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவில் தொடர்ந்தும் பெருந்தொகையானோர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். தப்பிவந்த பலர் தமது பகுதிகளில் ஊரவர்கள் பலர் உண்ண உணவில்லாமலும் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாமல் இருப்பதாகவும் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களும் பரவியுள்ளதாகவும் அவர்கள் மருந்துவாங்க ஆஸ்பத்திரிக்கு செல்லமுடியாமல் வருந்துவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மட்டக்களப்பில் வைத்து வாலிபர் கோஸ்டியினரால் கடத்தப்பட்ட றிபாயா என்ற முஸ்லீம் யுவதி கொல்லப்பட்டுள்ளார்.

உள்ளிச்சை ஆறும் கட்டையைச் சேர்ந்த யோகராசா என்ற வாலிபர் போட்டிக் குழுவினரால் கடத்தப்பட்டபின்னர் சடலமாக புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டார்.

யாழ் இருபாலைச்சந்தியில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ராஜலிங்கம் கிரிசாந்தி என்ற மாணவி மினிபஸ் மோதி மரணமானார்.

8.9.88

யாழ் சென்ற தனியார் பஸ் ஒன்று ஆயுதந்தாங்கிய இளைஞர் கோஸ்டியினரால் திசை திருப்பப்பட்டு பயணிகளிடமிருந்து அனைத்து உடமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

சுன்னாகம் பிரசைகள் குழு கலைக்கப்பட்டுவிட்டதாக தெரிவித்த குழுத்தலைவர் இது சம்பந்தமான அறிக்கையை வெளியிட விரும்பவில்லையென கவலையோடு தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னுள்ள கோட்டல் ஒன்றில் குண்டு வெடித்ததில் 5 பேர் கொல்லப்பட்டனர். 34 பேர் காயமடைந்தனர்.

திருகோணமலைப்பகுதியில் தமிழர்கள் அடிக்கடி காணமற் போவதையடுத்து இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

9.9.88

இரத்தினபுரிப் பகுதியில் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10.9.88
"தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு தமிழ் மக்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவே தேர்தலில் போட்டியிட எமது இயக்கம் தீர்மானித்துள்ளது" — ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதராசப்பெருமாள்.

பாணமையைச் சேர்ந்த திரு.சீனித்தம்பி என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11.9.88
வடக்குக்கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் தொடர்ந்தும் உணவுப்பற்றுக்குறை நிலவிவருகிறது. நோய்வாய்ப்பட்ட வயோதிபர்கள், சிறுவர்கள், பெண்களின் நிலைமை நாளுக்குநாள் மோசமடைவதால் அவர்கள் நோய் உபாதைகளுடன் ஊரீதியான பாதிப்புக்களுக்கும் உள்ளாகி வருகிறார்கள்.

12.9.88
அம்பாறை சென்ட்ரல் காம்ப் பொலிஸ் பகுதியில் புதுக்குடியகொலனி வாசிகளில் 5 பிள்ளைகள், 5 பெண்கள், 1 ஆண் ஆகியோரை ஆயுதபாணிகள் வெட்டிக்கொன்றனர்

14.9.88
பூஸாவிலிருந்து 120 பேர் விடுதலை செய்யப்பட்டு யாழ் நகருக்குக் கப்பலில் அனுப்பப்பட்டனர். இன்னும் 500 பேர் தொடர்ந்தும் பூஸாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் செல்லையா கந்தசாமி என்பவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

15.9.88
"பொதுத்தேர்தலை உடன் நடத்து" "அப்பாவி மாணவர்களை கொலை செய்யாதே போன்ற கோசங்களுடன் தென்பகுதி மாணவர்கள் ஆர்ப்பாட்ட கண்டன ஊர்வலங்க நடத்தி வருகின்றனர். பல பாடசாலைகள் தொடர்ந்து பகிஸ்கரிக்கப்பட்டு வருகின்ற

"இன்று தோட்டச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக புதிய பாடசாலைகள் கட்ட வேண்டும். வாசிகசாலைகள் திறக்கவேண்டுமென்றாலும் பல்வேறு சிரமங்கள், சிக்கல்கள் கடைகள், இவைகளுக்கு மத்தியிலும் அனுமதி கிடைப்பதில்லை. ஆனால் மதுபானசாலைகள் அமைப்பதென்றால் தாராளமாக அனுமதி கிடைத்துதிறந்து விடுகின்றார்கள்." — காங்கிரஸ் வர்த்தக தொழிற்பயிற்சி நிலைய இயக்குநர் கந்தசாமி.

தையிட்டியைச் சேர்ந்த 57 வயதான சிவபாதம் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொக்குவில் தனியார் படிப்பகம் ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த பொன்.செல்வராசா என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net

16.9.88

வடக்குக் கிழக்கில் தற்போது அமுலிலுள்ள இந்திய அமைதிப்படையினரின் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி சகல தீவிரவாதக் குழுக்களும் முன்வந்து தங்களின் ஆயுதங்களை அமைதிப்படையினரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று அமைதிப்படையின் பிரதம தளபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடாதிருக்க ஜே.ஆர் முடிவு செய்துள்ளார்.

செப்டெம்பர் 15ஆம் திகதி 7 மணி முதல் செப்டெம்பர் 20ஆம் திகதி 7 மணி வரை போர் நிறுத்தம் அமுலில் இருக்கும்.

யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மக்கள் மத்தியில் மகிழ்ச்சி காணப்பட்டது.

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடிப் பகுதியில் 40 வயது மதிக்கத் தக்கபெண் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

17.09.88

வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அமைதி நிலவுகிறது.

1983 கலவரங்களினால் பாதிப்படைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறிய இந்திய வம்சாவளி மக்கள் அப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளினால் மீண்டும் அகதிகளாகியுள்ளனர். 'மரணத்திற்குப் பின்னரும் நாங்கள் சொல்ல முடியாத தொல்லைகளுக்கு ஆளாகின்றோம். தாக்குதல்களினால் சிலர் உடல் ஊனமுற்றுள்ளனர். இதற்கு முகம் கொடுக்க முடியாமல் அத்தனை குடும்பங்களும் உடமைகளையும், குடியிருப்புகளையும் கைவிட்டு வெளியேறி அகதிகளாகிவிட்டோம்' என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடைகளைத் திறக்க, பஸ் சேவைகளை நடத்த மறுத்தால் கடும் தண்டனையளிக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

19.09.88

மாதா கிராமச் சந்தியில் நின்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினாலும், குஞ்சுக்குளம் கிராமத்தில் கிராம மக்களைத் தாக்கியதினாலும் இந்தியப்படையினர் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளனர் எனப் 'புளொட்' குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையின் வீட்டுப் பணிப்பெண்கள் எகிப்தில் இருந்தால் அவர்களைத் தேடிப்பிடித்து நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி எகிப்தில் உள்ள இலங்கைத் தூதுவர் கேட்கப்பட்டுள்ளார். வெளிநாட்டவர்களை எகிப்தில் வேலைக்கு அமர்த்துவதை எகிப்திய அரசு தடைசெய்துள்ளது.

20.09.88

வடக்கு, கிழக்கில் திலீபன் நினைவாகத் தொடர்ந்து துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தென்பகுதியில் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், கண்டனங்கள் தொடர்கின்றன. பல கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

20.09.88

வடக்கு, கிழக்கில் திலீபன் நினைவாக தொடர்ந்து துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தென் பகுதியில் மாணவர்களின் ஆர்பாட்டங்கள், கண்டனங்கள் தொடர்கின்றன. பல கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன.

வாழைச்சேனையை அடுத்துள்ள கோரகல்லி மடுவில் இயக்க வாலிபர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக கர்ப்பிணிப் பெண்களின் மரணம் நாட்டின் தேசியத் தொகையைவிட மும்மடங்கு அதிகரித்துள்ளது.

வாழைச்சேனையில் இயக்க வாலிபரின் தாயும், மற்றொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

23.09.88

கண்டி, மாத்தளை, மாத்தறை, அனுராதபுரம், களுத்துறை ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள் மாணவர்களின் ஆர்பாட்டங்கள் காரணமாக மூடப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களிலும் சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இரணைதீவில் வயிற்றோட்டம் காரணமாக 12 பேர் பலியாகியுள்ளனர்.

24.09.88

யாழ்ப்பதணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த இ.போ.ச. வண்டிகள், லொறிகள் என்பன வவுனியாவில் இடைமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்தம் நிரந்தர அமுலில் இருக்க வேண்டும், கிட்டுவையும் ஏனைய சகாக்களையும் விடுதலை செய்ய வேண்டும், உத்தியோக பூர்வ பேச்சு வார்த்தைக்கு எங்களை அழைக்க வேண்டும் என மூன்று கோரிக்கைகளை புலிகள் வெளியிட்டுள்ளனர்.

26.09.88

வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவத்தின் சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

மாத்தளை இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் தோட்டத் தொழிலாளர்களைத் தாக்கினார்கள்.

27.09.88

சித்தாண்டிப் பகுதியில் ரமேஷ் என்பவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

...ஜோசப்

சஞ்சிகையாசிரியர்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் ஒன்றுகச் சந்தித்துக் கொண்ட அதிசயம் 24.09.88இல் கேர்ண நகரத்தில் நடைபெற்றது. இச் சந்திப்பை அதிசயம் என்று குறிப்பிடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கியமாக இந்த ஈழத் தமிழ்ப் பேனாக்காரர்கள் சந்தித்துக்கொண்ட இடம் ஈழ மண்ணிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள அந்நிய தேசம். தங்களது பேனாக்களால் ஏனைய எண்ணெழுத்துக்காரர்களுடனான கருத்து முரண்பாடுகளுடன் மோதி வந்த சஞ்சிகையாசிரியர்கள் ஒன்றுகக் கூடி தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்கள். சஞ்சிகைகளை மட்டுமே படித்துக் கொண்டிருந்த வாசகர்கள் அவற்றின் கர்த்தாக்களை நேரடியாகச் சந்தித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டார்கள். ஒற்றுமை, புரிந்துணர்வு, விமர்சன நேர்மை போன்ற சொற்களெல்லாம் எழுத்தில் மட்டுமல்லாது செயலிலும் காட்டப்பட்டது. இவையெல்லாம் அதிசயமில்லையா?

இந்த இலக்கியச் சந்திப்பின் நிகழ்ச்சிகளை 'புதுமை', 'சிந்தனை', 'தூண்டில்', 'வண்ணாத்திப் பூச்சி', 'ஏலையா', 'வெகு ஜனம்', 'கலை விளக்கு', 'பெண்கள் வட்டம்' ஆகிய சஞ்சிகைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், ஆசிரியர் குழுக்களும் தங்கள் அறிமுகத்துடன் ஆரம்பித்து வைத்தார்கள்.

தாங்கள் சஞ்சிகை ஆரம்பித்ததன் நோக்கம் பற்றியும், சஞ்சிகையின் உள்ளடக்கங்கள் பற்றியும் 'புதுமை' சார்பாக திரு. பாரதிதாசனும், 'சிந்தனை' சார்பாக திரு. குமாரசாமியும், 'தூண்டில்' சார்பாக திரு. செல்வராஜாவும், 'வண்ணாத்திப் பூச்சி' சார்பாக திரு. நாகலிங்கமும், 'ஏலையா' சார்பாக திரு. முருகதாஸும், 'வெகு ஜனம்' சார்பாக திரு. வேலாயுதமும், 'கலை விளக்கு' சார்பாக திரு. பாக்கியநாதனும், 'பெண்கள் வட்டம்' சார்பாக திருமதி. தேவிகாவும் விபரமாகத் தெரிவித்தார்கள். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மஞ்சள் ஏடுகளின் ஆக்கிரமிப்பை உடைப்பது, சமுதாய விழிப்பை ஏற்படுத்துவது, அரசியல் கருத்துகளை பரவலாக்குவது என்ற நோக்கங்களை அனைத்து சஞ்சிகை ஆசிரியர்களுமே

www.tamilarangam.net

பொதுவாகக் கொண்டிருந்தார்கள்.

நிகழ்ச்சியின் இரண்டாவது அம்சமாக தாங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி ஒவ்வொரு சஞ்சிகையாசிரியர்களும் குறிப்பிட்டார்கள். 'புதுமை' சார்பாக திரு.ராகவன், 'தூண்டில்' சார்பாக திரு.சிவசோதி தவிர ஏனைய சஞ்சிகைகள் சார்பாக முதலில் அறிமுகம் செய்தவர்களே உரையாற்றினார்கள்.

சந்தாதாரராகாமல் வாசகர்கள் இலவசமாகப் படிப்பதாலும், சந்தாதாரரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாலும், ஏற்பட்டிருக்கும் பொருளாதாரக் கஷ்டத்தைப் பற்றி அனைத்து சஞ்சிகையாசிரியர்களும் குறிப்பிட்டார்கள். தங்களுக்குக் கிடைக்கும் சமூக உதவிப் பணம் அல்லது வேலை செய்தால் கிடைக்கும் பணம் போன்றவற்றைச் செலவழித்துதான் சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட்டு வருவதாக வேதனையான உண்மையை பல ஆசிரியர்கள் தெரிவித்தார்கள். ஆக்கப் பஞ்சம், சரியான விமர்சனமின்மை போன்றவையே அனைத்து சஞ்சிகைகளும் சந்திக்கும் பொதுவான பிரச்சினைகளாக இருந்தன.

முன்னர் வெளிவந்து இடையில் தடைப்பட்டுப் போன 'நம்நாடு' சஞ்சிகையின் ஆசிரியர் திரு.கிருஉஷ்ணகாந்தன் தனது சஞ்சிகை இடையில் தடைப்பட்டுப் போனதற்கான காரணத்தை விளக்குகையில் குற்றவியல் புலனாய்வுத் துறையினராலேயே இத் தடங்கல் ஏற்பட்டதெனத் தெரிவித்தார். முன்னர் வெளிவந்து இடையில் தடைப்பட்ட 'எண்ணங்கள்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு.செல்வராசா தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

'எண்ணங்கள் புதிது' என்ற கட்டுரைத் தொகுப்பு நூலின் ஆசிரியர் திரு.சிறீரங்கன் தன்னை அறிமுகப்படுத்திய பின் அந் நூலை வெளியிட்டபின் ஏற்பட்ட பொருளாதார நஉஷ்டத்தைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் மூன்றாவது அம்சமாக வாசகர் விமர்சனங்கள் இடம் பெற்றன. இலக்கியச் சந்திப்பில் பங்குபற்றிய வாசகர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருந்தது. திரு.அன்னராசா, திரு.சொக்கலிங்கம், திரு.சந்துஉஷ்குமார், திரு.சன்முகலிங்கம், திரு.பார்த்திபன், திரு.நாகலிங்கம், திரு.பூவேந்திரன், திரு.சுந்தரமூர்த்தி, திரு.முருகதாஸ், திரு.செல்வராஜா ஆகியோர் விமர்சனங்களையும், கருத்துகளையும் தெரிவித்தார்கள். எல்லாவற்றிற்கும் வாசகர்களையே குறை கூறக் கூடாதென்றும், ஆக்கங்களை துணிவாக எழுத வேண்டுமென்றும், உலகச் செய்திகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டுமென்றும், சஞ்சிகையாசிரியர்கள் ஒவ்வொருவரும் மற்றைய சஞ்சிகைகளை விமர்சிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. பார்த்திபனின் ஆக்கங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றியும் சிலர் விமர்சித்தார்கள்.

நிகழ்ச்சிக்குத் தாமதமாக வந்திருந்த திரு.ஸினிலோகன் முன்பு தான் வெளியிட்ட 'அறுவை' என்ற சஞ்சிகை இடையில் தடைப்பட்டதற்கான காரணங்களைத் தெரிவித்ததுடன், சஞ்சிகைகளைப் பற்றியும் விமர்சித்தார்.

நிகழ்ச்சியின் நான்காவது அம்சமாக எதிர்கால ஆலோசனைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய திரு.அன்னராசா மேற்கு ஜேர்மனியில் இருக்கும் தமிழ்ச் சிறுவர்களின் கல்வி பற்றி விபரமாகத் தெரிவித்ததுடன் இதற்கு அனைத்து சஞ்சிகைகளும் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியின் இறுதியில் அடுத்த இலக்கியச் சந்திப்புப் பற்றித் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த இலக்கியச் சந்திப்பை டோற்முண்ட் நகரில் வைப்பதென்று முடிவு செய்யப்பட்டதுடன் அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இலக்கியச் சந்திப்பு நடைபெற்ற மண்டபத்து வாசலில் கண்காட்சியாகவும், விற்பனையாகவும் சஞ்சிகைகள், ஆக்கங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சி ஆரம்பத்தின்போது 'புதுமை' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு.வாஸீநாசன் "பெண்கள் வட்டம்" சஞ்சிகையைப் பற்றிய விமர்சனத்தை ஆரம்பித்து பின் பெண்ணுரிமை பற்றித் தெரிவித்த கருத்துகள் நிகழ்ச்சி முடியும்வரை அனைவரையும் பற்றிப் பிடித்து அதுபற்றி ஆராய வைத்தது. இலக்கியச் சந்திப்பில் தற்செயலாக இந்த விடயம் ஏற்பட்டாலும், இதுவும் இலக்கிய விருந்தாக அமைந்தது.

நிகழ்ச்சிகளைத் திருமதி.விக்கு ஒழுங்குபடுத்தினார். தவிர்க்க முடியாத நேரமின்மை காரணமாக இவர் அடிக்கடி பலரின் உரையை இடைமறிக்க வேண்டியேற்பட்டது.

அழைப்பிதழ் அனுப்பியதிலிருந்து மண்டபம், தேநீர், மதிய போசனம், பின்னைப் பராமரிப்பு என்று அனைத்தையும் ஏற்பாடு செய்து இலக்கியச் சந்திப்பில் முக்கிய பங்காற்றிய திரு.பீற்றர் ஜெயரட்ணத்துக்கு அனைவரும் நன்றி தெரிவித்தனர்.

இச் சந்திப்பில் முன்பு வெளிவந்து இடையில் நின்றுவிட்ட 'யாத்திரை' சஞ்சிகையின் ஆசிரியர்குழு சார்பில் திரு.திருநாவுக்கரசு கலந்து கொண்டார். இதை முதலில் குறிப்பிடத் தவறிவிட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சைக்கிளில் உலகவலம்

அணு ஆயுத உற்பத்திகளை எதிர்த்து சைக்கிளில் உலகை வலம் வந்துகொண்டிருக்கும் தமிழ்நாட்டு நண்பர்களான திரு.சிறினிவாசராவ் (வயது 27), திரு.ஞானசேகரன் (வயது 25) ஆகியோர் மேற்கு ஜேர்மனிக்கு வந்த போது நாம் சந்தித்தோம்.இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்த நண்பர் திரு.சோமசுந்தரம் அவர்களுக்கு நன்றி.

— கடலோடிகள்

கே — இந்தியாவிலேயே அணு ஆலைகள் இருக்கின்றன.அவற்றுக்கெதிராக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

பதி — எமது பயணத்தின் நோக்கம் அணு ஆலைகளை குறைப்பதல்ல.அணு ஆயுதங்களைக் குறைப்பதே.அணு ஆலைகள் ஆக்க சக்திக்குப் பயன்படுவதையே விரும்புகிறோம்.

கே — அணு ஆயுத உற்பத்திகளுக்கான உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க ஏன் இந்த உலகம் சுற்றும் திட்டத்தைத் தெரிவு செய்தீர்கள்?இதற்காக சைக்கிளைத் தெரிவு செய்ததற்கான காரணம் என்ன?

பதி — சைக்கிளில் ஒரு வித கவர்ச்சியுண்டு.இதனால் பலதரப்பட்ட மக்களை சந்திக்க வாய்ப்புண்டு.உலகின் பல தலைவர்கள், முக்கியஸ்தர்கள் முதல் பாமர மக்கள் வரை சந்தித்து அவர்களின் கருத்துகளைச் சேகரித்து ஐ.நா சபையில் சமர்ப்பிப்பதற்காகவே இந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

கே — எத்தனையாம் திகதி?எந்த இடத்திலிருந்து?எத்தனை மணிக்கு?உங்களுடைய பயணம் ஆரம்பமானது?

பதி — 1986ம் ஆண்டு,மார்ச் மாதம்,காலை ஒன்பது முப்பது மணிக்கு நியுடெல்லியிலிருந்து எமது பயணம் ஆரம்பமானது.திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் இதை ஆரம்பித்து வைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே - இந்தியாவிலிருந்து புறப்படும்போது உங்களுடைய மனநிலை எப்படியிருந்தது?

பதி - உலக சமாதானத்திற்காகவும், அமைதிக்காகவும் தனிநபர்களாலும் ஏதாவது உருப்படியாகச் செய்ய முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையும், உற்சாகமுமிருந்தது.

கே - இந்தியாவிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு வரும்வரை நீங்கள் பயணம் செய்த நாடுகள் எவை?

பதி - ஆப்கானிஸ்தான் அரசாங்கம் விசேட அழைப்பிதழையும், விமானப் பிரயாணச் சீட்டுகளையும் அனுப்பியிருந்தமையினால் முதலில் காபூல் சென்று அங்கிருந்து லாவோஸ், கம்பூச்சியா வந்தோம். அங்கிருந்து தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் வந்தோம். பின்பு அவுஸ்திரேலியா வந்து அங்கிருந்து ஆர்ஜன்டீனா, பிரேசில், கியூபா, மெக்சிகோ, அமெரிக்கா வழியாக கனடாவுக்கு வந்தோம். பின்பு அங்கிருந்து ஸிம்பாவே வந்து எல்லை நாடுகளுக்கூடாக ரன்சானியா, நைஜீரியாவுக்கு வந்தோம். அங்கிருந்து ஸ்பெயின் வந்து பின் இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து போய் பின்னர் பெல்ஜியம் வழியாக இங்கு வந்தோம்.

கே - இந்த நாடுகளுக்கூடாக வரும்போது எந்த இடங்களில் சைக்கிளில் பயணம் செய்யவில்லை?

பதி - ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டம் போகும்போது விமானம் மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ போவோம். சிங்கப்பூரிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குக் கப்பலிலும், கனடாவிலிருந்து ஆபிரிக்காவுக்கு விமானத்திலும் பிரயாணம் செய்யவேண்டியேற்பட்டது.

கே - இந்த இடங்களில் ஏதாவது மறக்க முடியாத சம்பவம் ஏற்பட்டதா?

பதி - லாவோஸிலிருந்து தாய்லாந்து வரும் வழியில் எங்களிடமிருந்த சகலவற்றையும் வழிப்பறிக் கொள்ளையர்கள் பறித்து விட்டார்கள். இதை எம்மால் மறக்க முடியவில்லை. இதன்பின் உள்ளூர் ஆட்கள் அனைவரும் எம்மைப் பாதுகாத்து, எமக்குத் தேவையானவற்றைச் செய்து நாம் பயணத்தைத் தொடர சகல உதவிகளையும் செய்தார்கள்.

கே- நீங்கள் பிரயாணம் செய்த நாடுகளில் மொழிப் பிரச்சினை உங்களைப் பாதிக்கவில்லையா?

பதி - ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரெஞ்ச், ஸ்வாகிலி என்ற ஆபிரிக்க மொழியும் தெரிந்திருந்தமையினால் சமாளிக்க முடிந்தது.

கே - நீங்கள் பிரயாணம் செய்த நாடுகளில் உங்களுக்கு வரவேற்பு எப்படியிருந்தது?

பதி - மக்கள் மிகவும் ஆதரவும், உற்சாகமும் காட்டினார்கள். எமது பயணம் வெற்றி பெற வாழ்த்தினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே - நீங்கள் பிரயாணம் செய்த நாடுகளில் யாருடன் தங்கினீர்கள்?

பதி - இந்த நாடுகளில் வாழும் இலங்கை, இந்தியத் தமிழர்களுடன் தங்கினோம். யாருமே கிடைக்காவிடின் மலிவான விடுதிகளில் தங்குவோம்.

கே - நீங்கள் பிரயாணம் செய்த நாடுகளில் பார்த்த ஏதாவது உங்களுடைய நாட்டில் இல்லையே என்று நீங்கள் கவலைப்பட்டதுண்டா?

பதி - சில நாடுகளில் சில ஒழுங்குகளுண்டு. உதாரணமாக மேற்கு ஜேர்மனியில் நகரங்கள், தெருக்கள் துப்புரவாக இருக்கின்றன. இது எமது நாட்டில் மிகவும் குறைவு. முக்கியமாக தலைநகரங்களில் மிக மிக குறைவு.

கே - நீங்கள் பிரயாணம் செய்த நாடுகளில் பார்த்த ஏதாவது உங்களுடைய நாட்டில் இல்லை என்பதற்காக சந்தோசப்பட்டதுண்டா?

பதி - பல. இங்கு அணு ஆயுதங்கள் இருக்கின்றன. எமது நாட்டில் அவை இல்லை. இந்த நாடுகளில் எல்லோரும் இயந்திரமாக வாழ்கிறார்கள். எமது நாட்டில் அப்படியில்லை. மற்றும் இந்த நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் வாழும் முறை அதிர்ச்சியைத் தருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் சிதறிக் கிடக்கும் இலங்கைத் தமிழர்கள் ஈழம் கிடைத்ததும் அங்கு ஓடி வருவார்கள். ஆனால் . அங்கே ஒருவருடன் ஒருவர் சரளமாகத் தொடர்பு கொள்ள முடியாமல் ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், நோர்சி, டானிஸ் போன்ற மொழிகளை மட்டுமே படிப்பதால் சைகை முறையிலேயே ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள வேண்டியேற்படும். இவர்களுக்கு இணைப்பு மொழியாக எது இருக்கும் என்பதே கவலை. ஈழத் தமிழர்களை அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தாய்மொழியான தமிழைக் கற்பிக்கும்படி கோரி இன்னொரு சைக்கிள் மூலமான உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளலாமா என நாம் நினைத்ததுண்டு. எமது நாட்டில் தமிழ்க் குழந்தைகளுக்கு இப்படி ஒரு தர்மசங்கடம், சாபக்கேடு இல்லையே என நாம் சந்தோசப்படுகிறோம்.

கே - இனி நீங்கள் போக இருக்கும் நாடுகள் எவை?

பதி - சுவீடன், கிழக்கு ஜேர்மனி, போலந்து, ரஷ்யா, சீனா, தென்கொரியா, ஜப்பான்–இங்கு நாங்கள் அணுகுண்டால் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கெரோஷிமா, நாகசாக்கி போவோம் – இறுதியாக அமெரிக்கா போய் ஐ.நா காரியாலயத்தில் நாம் சேகரித்த சகலவற்றையும் சமர்ப்பிப்போம்.

கே - உங்களுடைய நாட்டுக்கு எப்போது போய்ச் சேருவீர்கள்?

பதி - 1989ம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம்.

கே - எந்தெந்த நாடுகளில் இலங்கைத் தமிழர்களைச் சந்தித்தீர்கள்?

பதி - இலங்கைத் தமிழரைச் சந்திக்காத நாடே இல்லை. எங்குமிருக்கிறார்கள். லாவோஸில் கூட ஒரு இலங்கைத் தமிழர் இருந்தார். ஆபிரி

www.tamilarangam.net

க்காவில் சுமார் 400 பேர்வரை இருக்கிறார்கள்.

கே — உங்களுடைய நாட்டுக்குப் போனபின் உங்களுடைய அடுத்த முயற்சி என்ன?

பதி — இந்த முயற்சிக்காக இடையில் நிறுத்திய எமது இறுதியாண்டு படிப்பை முடிப்பது, உலக அணு ஆயுத குறைப்புகளைப் பற்றி அயராது உழைப்பது, ,இப்படிப்பட்ட முயற்சி செய்ய விரும்புவோருக்கு உற்சாகமளிப்பது, இது சம்பந்தமாக நிறுவனம் ஒன்று ஆரம்பிப்பது.

---

( 7 ம் பக்கத் தொடர்ச்சி)

நூண்டில் கலம் ஒன்றிலிருந்து இந்தக் கலம்வரை அப்படியான கருத்துள்ள எந்தக் குறிப்பையும் நாம் எழுதவில்லை. இதை வாசகர்களாகிய நீங்களும் அறிவீர்கள். எமது கருத்துகளுடன் முரண்பாடுகள் இருந்தாலும் கூட 'ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும் கருத்துகளைக் கொண்டிருக்கும் நூல்களையும் படித்து நல்லவை எவை, கெட்டவை எவை என்று தேர்ந்தெடுக்கும்படியான அறிவை நீயே வளர்த்துக் கொள்' என்ற ஒள்வையாரின் கூற்றிற்கேற்ப பல சஞ்சிகைகளை நூல் அறிமுகம் செய்து வருகிறோம். ஆகவே திரு. பாரதிதாசனின் விமர்சனத்தை நாம் முழுமையாக மறுக்கிறோம். இயக்கங்களின் உத்தியோகபூர்வ ஏடுகள், அவற்றின் சின்னம் அல்லது பெயரால் உரிமை கோரப்படும் நூல்கள் தவிர ஏனையவை நூல் அறிமுகம் செய்யப்படும்.

— கடலோடிகள்

**எழுத்தாளர்**

தன் இதயத்துள் உள்ளதைப் பார்த்து, அவன் அங்கு காண்பதை அப்படியே உண்மையாக எழுதக் கூடிய எந்த மனிதனுக்கும் ஏராளமான வாசகர்கள் இருப்பார்கள்.

—எட்ஹோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(16 ம் பக்கத் தொடர்ச்சி)

மறந்துவிட்டீர்களா? உண்ணும் உணவிலிருந்து உடுக்கும் துணிமணிவரை யாவும் அந்நிய நாட்டாரின் உற்பத்தியே. இந் நிலையில் இந்திய 'மஞ்சள் ஏடுகளை' இறக்குமதி செய்ய இலங்கையரசு அனுமதி வாங்கியுள்ளது. ஆக எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? அதுவும் பாலியல் அடிப்படை உணர்வில் கேட்க வேண்டியதில்லை. இலங்கையரசின் திறந்த பொருளாதாரக் கொள்கையால் அங்கு வாழும் மக்களும் தாராள மனம் படைத்தவர்களாகிவிட்டார்கள். மற்றப்படி கட்டுரை ஐரோப்பா வாழ் தமிழருக்கு உபயோகமானது.

நூறன்பேர்க் ப.வி. சிறீரங்கன்

தூண்டில் கலம் எட்டில் வெளியான 'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது' என்ற சிறுகதை எடுத்ததெற்கெல்லாம் பெண்கள் மீது சந்தேகம் கொள்ளும் ஆண் வர்க்கத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருந்தது.

காகென் நிருபா நாகலிங்கம்

'ஒரு காதல் நிராகரிக்கப்படுகிறது' என்ற சிறுகதையையும், அதைத் தொடர்ந்து வெளிவந்த விமர்சனங்களையும் படித்தேன். கதையில் வரும் கொம்பியூட்டர் வகுப்பு, மற்றும் ஜேர்மன் சுற்றுடல் மிகத் தத்ரூபமாக வர்ணிக்கப்பட்டிருந்தது. அதிகமான ஆண்கள் திருமணம் முடிக்க முன்னரே பெண்ணைக் கட்டுப்படுத்தல், பெண்ணுக்குச் சமமான இடம் கொடாமை, தொடர்ந்து இங்கிருக்கவும், நன்மைகளைப் பெறவுமே ஜேர்மன் பெண்களை மணம் முடித்தல், மதம் மாறுதல் போன்றவற்றைச் செய்கின்றனர். கதையில் வரும் ஜீவன் பாத்திரமும் கதையின் கருத்தும் யதார்த்தமாக இருக்கிறது. இலங்கையை "அசிங்கங்கள்" நிறைந்த நாடு என்று கூறிக்கொள்ளும் பலர் இங்குள்ளனர். அவர்களின் மனங்களை வெளிப்படுத்தியது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

ஸ்ருட்காட் உமா

துளசியின் 'பசி' சிறுகதை வெறும் கற்பனையில் வடித்தெடுக்கப்பட்ட பாத்திரங்களால் உருவாக்கப்பட்டதல்ல. இந்த நிமிடம்வரை தாய் மண்ணில் வாழ்விற்காய் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் அவலங்களை உள்ளபடியே காட்டும் உண்மைக் கதை. இன்றைய யதார்த்த நிலமைகளின் விளைபொருட்களான வறுமையையும், பசியையும், இடையில் சிக்கித் தவிக்கும் ஏழை நெஞ்சங்களையும் சூசை, கன்னியம்மா பாத்திரங்களின் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறார் இந்த எழுத்தாளர். ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கும் இயற்கை வர்ணிப்புகளுடன் சேர்ந்து பாத்திரங்களின் அமைப்பும் இடம் பிடித்துக் கொள்ள கதை மேலும் மெருகேறுகிறது. இந்தக் கதையில் கடல் வருகிறது. கடலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்பியிருக்கும் மக்கள் வருகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைகள் வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக எமது தாய் மண்ணின் அவலம் வருகிறது. போராட்டத்தின் பாதிப்புகளும், அடக்குமுறைகளின் பாதிப்புகளும் எந்தெந்த அளவுகளில், எவ்வெவ்வாறு மக்களிடையே இடம்பெறுகின்றன என்பதை சிறிய கதையிலேயே ஒரு கவிதையைப் போலத் தந்த எழுத்தாளருக்கு பாராட்டுகள். எமது நாட்டு யதார்த்த நிலமைகளைக் கதைகளிலே அப்படியே படம் பிடித்துக் காட்டும் பார்த்திபன் போன்ற எழுத்தாளர்களின் வரிசையில் துளசியும் அணிவகுத்து நிற்கிறார்.

ஸ்ருட்காட் .காளிதாஸ்

புரட்டாசி மாத சஞ்சிகையில் இடம்பெற்ற 'பசி' என்ற சிறுகதை நல்ல தரமாக இருந்தது. மண் வாசனையோடு பின்னப்பட்ட ஒரு கதையை பல நாட்களுக்குப்பின் வாசிக்க உதவிய தூண்டிலுக்கும், கதாசிரியருக்கும் வாழ்த்துகள்.

ஒரு சிறுகதை, ஒரு தொடர்கதை, ஆசிரியர் குறிப்பு, வீரகேசரிச் செய்திகள் என்பனவற்றுடன் புத்தகம் முடிந்துவிடுகிறது. விகடத் துணுக்குகள், ஒரு பக்கக் கதை, குறுக்கெழுத்துப் போட்டி எனப் பல அம்சங்களைச் சேர்த்தால் என்ன? தரமான ஒரு புத்தகம் தொடர்ந்து வளர வேண்டும் என்பதே எனது அவா. புதுப் புது அம்சங்களுடன் புதுப் பொலிவு பெற வாழ்த்துகள்.

வூப்பெற்றால் இ. ஆர். இம்மனுவேல்

தூண்டிலில் வெளிவரும் கதை, கவிதை எல்லாமே நன்றாக உள்ளது. எமது நாட்டில் நடக்கும் உண்மையான செய்திகளை அறிவதற்கு ஒவ்வொரு மாதமும் தூண்டிலை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன். தூண்டில் மேலும் புதுப் பொலிவுடன் சிறப்புற எனது வாழ்த்துகள்.

அல்ப்ஸ்ரட் ஆ. நாகேந்திரன்

தூண்டில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். செய்திக் குறிப்பில் வீரகேசரிச் செய்திகளைப் படித்து இலங்கையின் நிலமைகளை அறியக் கூடியதாக உள்ளது. "கன்னை மிதித்தவன்" தொடர்கதை சுமாராகப் போகிறது. மென்மேலும் தூண்டில் முன்னேற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

வைகர் தி. பாலச்சந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொறாமை

... ராகவன்

மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகளில் பொறாமையும் ஒன்று. ஒருவர் ஏதாவது ஒரு முயற்சியிலே முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கையில் அவரது முன்னேற்றத்தைப் பாதிக்காத வகையில் நாமும் அதை அடைவது எனத் திடம் கொண்டு, எவருக்கும் தீமை இல்லாத வழிகளில் முயற்சி செய்து பார்த்தல் எம்மில் சிலருக்கே உண்டு. இதைவிட்டு அவர் போகும் பாதைக்குத் தடையாகப் பல இடையூறுகள் செய்து, அவரை முன்னேறவிடாது நாமும் 'வாழாவெட்டியாய்' இருப்பது எவ்விதத்திலும் எம்மை முன்னேற்றாது.

எமது இனத்தைப் பொறுத்தவரையில், தாய்நாட்டில் பல துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்றாலும் சரி, வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பவர்கள் என்றாலும் சரி பொறாமை என்பது எப்படியோ பற்றிப் பிடித்துக் கொள்கிறது. முக்ககியமாக சுதந்திரத்துக்கு எனப் போராடப் புறப்பட்ட ஈழத் தமிழ் இயக்கங்களின் பிளவுகளுக்கு பொறாமையும் ஒரு காரணியாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. ஆரம்பத்தில் தோழமையுடன் இருந்தவர்களை தலைமைக்கும், பதவிக்கும் ஆசை கொள்ள வைத்து, நெற்றி முட்ட மோதி துப்பாக்கி வேட்டுகளைப் பரிமாற வைத்ததும், எமக்கு நிச்சயமாகச் சுதந்திரம் பெற்றுத் தருவார்கள் என ஏங்கிக் கொண்டிருந்த மக்களை புதைகுழிக்குத் தள்ளிக் கொண்டிருப்பதும் இந்தப் 'பொறாமைப் பேய்தான்'.

ஆரம்பத்தில் மனக்கசப்புடன் தொடங்கும் பகைகளை அப்போதே பேசித் தீர்க்க பழக்கப்படாதவராய் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மினத்திற்கு பொறாமை ஓர் முட்டுக்கட்டை. இதனால் உண்டாகும் பகைமையினால் நாம் வாழ்க்கையில் நாம் வாழ்க்கையில் பின்தள்ளப்படுகிறோமென உணர்ந்து கொள்ளுதல் அவசியமானது.

மாடி வீடு கட்டியவரை நோக்கி நாமும் ஓர் மாடிவீடு கட்ட வேண்டும் எனக் கருதி, சமூக விரோத வழிகளில் சம்பாதித்து, தடக்கி விழ வைப்பதும் பொறாமைதான். கழுத்தில், கைகளில் தொங்கும் ஆபரணங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏக்கர் கணக்கில் காணி, பூமிகள் ... இப்படி வாழ்க்கையின் அவசியத்திற்கு அப்பாற்பட்டவைகளை நாள்தோறும் எண்ணி இவர்களைப் போன்று எமக்கு வாழக் கிடைக்காதா என ஏங்குவதிலும் பார்க்க எம்மிலும் வாழ்க்கைத்தரத்தில் குறைந்தோரைப் பார்த்துத் திருப்திப்படப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

வெளிநாடுகளில் கூட எம்மினத்திற்குள்ளேயே நாம் பலவற்றிற்காகப் பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். காலையில் ஏழு மணிக்கு வேலைக்குப் போகிறார். கை நிறையச் சம்பாதிக்கிறார். ரெலிவிசனும், டெக்செற்றும் வைத்திருக்கிறார். காரும் வாங்கிவிட்டார் என்று மற்றவர்களைப் பற்றி பொறாமையுடன் பிதற்றிக் கொள்வதிலோ அவருடன் மனக் கசப்படைவதிலோ எந்த அர்த்தமும் இல்லை.

எங்களிடையே ஒற்றுமையைச் சீரழித்து, குரோதத்தை வளர்த்து வாழ்க்கையைப் பின்னோக்கித் தள்ளும் பொறாமையை எம்மிலிருந்து விரட்டுவதற்கு முயற்சி செய்வோம். முன்னேறுவோம்.

பொறாமையின் கண்களுக்குச் சிறு பொருள்களெல்லாம் மிகப் பெரியவைகளாகவும், குள்ளர்கள் பெரிய அசுரர்களாகவும், சந்தேகங்களெல்லாம் உண்மையாகவும் தோன்றும்.

—செர்வான்டிஸ்

பொறாமை முழுவதையும் ஆரம்பத்திலேயே கழுத்தை நெரித்துவிட வேண்டும். இல்லையெனில் அது வலிமையடைந்து உண்மையை வென்றுவிடும்.

—டேவனன்ட்

அடுத்த வீட்டுக்காரன் வெற்றியடைவதில் பொறாமைக்காரன் உடல் மெலிவான்

—ஹொரேஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழம் :

# விடுதலைக்கு எதிராக புலிகளின் பாசிச போக்குகள்

அன்புடன்... அறிவது. நலம் நலம். நாடுவதும் அதுவே என சம்பிரதாயமாக எழுதலாம். ஆனால் இங்கு எல்லாமே வேதனை தரும் நிகழ்வுகளாக நடைபெறுகின்றன.

18-7-1988 திங்கள் மாலை 6 மணி அளவில் நல்லூர் சட்டநாதர் வீதியில் நமது நண்பரும் உன்னதமான போராளியுமான T. விமலேஸ்வரன் (ஈஸ்வரன் பல்கலைக்கழக வளாகம்—கிளிநொச்சி) இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது மரணம் எவருமே அறியாதபடி மூடி மறைக்கப்பட்டு விட்டது. வளாகத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த போது எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துப் பத்திரிக்கைகள் கொட்டான் எழுத்துக்களில் இவரது செய்தியைப் பிரசுரித்தனவோ அவ்வளவிற்கு சாதாரண மரண அறிவித்தலைக் கூட போட மறுத்துவிட்டன. அநாதரவான நிலையில் தெருவில் இருந்து எடுத்துச் செல்லப் பட்டு பூநகரியில் இவரது உறவினர்கள் பெற்றோர்களால் தகனம் செய்யப்பட்டார்.

இவரது மரணம் சம்பந்தமாகவும் தொடரும் கொலைகள் சம்பந்தமாகவும் இன்றும் புலிகள்-ஈரோசின் கண்மூடித்தனமான அடாவடித்தனம் சம்பந்தமாகவும் அங்குள்ள முற்போக்குப் பத்திரிக்கைகளில் வெளிவர செய்ய முடியாதா? தினமும் இவ்விரு இயக்கங்களாலும் கடத்தல்—கொலைகள் தொடருகின்றன. அவ்வாறு வெளிவரச் செய்ய முடியுமானால் சகல செய்திகளையும் எடுத்து அனுப்ப முடியும். புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம் போன்ற இதழ்களில் வரச் செய்வீர்களா?

விமலேசின் கொலை சம்பந்தமாகவாவது இவற்றில் ஏதாவது தெரியப்படுத்த முடிந்தால் தெரியப்படுத்துங்கள். இவரது வரலாறு, எதற்காகக் கொல்லப்பட்டார், யாரால் கொல்லப்பட்டார் என்பது தெரியும்தானே. பல்கலைக் கழகப் போராட்டங்களில் நீதிக்காகவும் நேர்மைக்காகவும் தலைமை தாங்கிப் போராடியதால் கொல்லப்பட்டார். புலிகளால் கொல்லப்பட்டார்.

................

நன்றி

.........

ஈழத்திலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ள புதிய ஜனநாயகம் வாசகருக்கு ஒரு ஈழத் தமிழர் யாழ் நகரிலிருந்து சமீபத்தில் எழுதிய கடிதம் இது. இத்துடன் கொலை செய்யப்பட்ட மாணவன் விமலேஸ்வரன் பற்றிய மேலும் சில தகவல்களையும் சேர்த்து அவர் அனுப்பியுள்ளார்.

1987 மத்தியில், மற்ற பிற போராளி அமைப்புகளுக்கும் மக்கள் திரள் அமைப்புகளுக்கும் புலிகள் தடை விதித்ததற்கு எதிராக, புலிகளின் பாசிசத்துக்கு எதிராக யாழ் பல்கலைக் கழக மாணவர் போராட்டத்தை ஒழுங்கமைத்த விஜிதரன் என்ற மாணவர் புலிகளால் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். விஜிதரன் கொலையைக் கண்டித்தும், மக்கள் திரள் அமைப்புகளைப் புலிகள் தடை செய்ததை எதிர்த்தும் ஜனநாயக உரிமை வேண்டி யாழ் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்களை ஆரம்பித்தது. இறுதிக் கட்டமாக 4 மாணவர்களும், 2 மாணவிகளும் உண்ணாவிரதம் இருந்தனர். அதை ஒழுங்கமைத்து பங்கேற்ற முக்கியமானவர்களில் ஒருவர், யாழ் பல்கலைக்கழக மாணவர் டி விமலேஸ்வரன். கிளிநொச்சி விவசாயி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு போராளி. சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராக, பல மாணவர் போராட்டங்களில் முக்கிய பங்காற்றிய முன்னணியாளர். புலிகளின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக, பிற போராளி அமைப்புகள் மக்கள் திரள் அமைப்புகளின் ஜனநாய உரிமைக்காகப் போராடியதற்காக இப்போது புலிகளால் கொல்லப் பட்டார்.

விஜிதரனோ, விமலேஸ்வரனோ, இந்தக் கடிதங்களை எழுதிய வேறு ஈழத் தமிழர்களோ எந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சிங்கள பாசிச ஜெயவர்த்தனே கும்பலின் பேரினவாதத்துக்கு எதிராகவும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் போராடும் அதே வேளையில், ஈழத்திலுள்ள புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு எதிராக புலிகள் மேற்கொண்டுள்ள பாசிசத்தை எதிர்ப்பவர்கள்.

விமலேஸ்வரன் மட்டுமல்ல, பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்துக்குப் பிறகு ஏறக்குறைய நூற்றுக்கும் மேலான ஈழத் தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். ஈழ விடுதலைக்கு எதிரான துரோகிகளை அழித்தொழிப்பதில் தவறில்லை. போரில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அது அவசியமானதும் கூட. ஆனால் புலிகளால் கொல்லப்பட்ட ஈழத் தமிழரில் பாதிப் பேருக்கு மேலானவர்கள் இந்திய ஆக்கிரமிப்பையும், சிங்களப் பேரினவாதத்தையும் எதிர்க்கும் போராளிகள். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்று துரோகமிழைத்த ஈ. பி. ஆர். எல். எஃப் டெலோ, ஈ. என். டி. எல். எஃப், பிளாட் போன்ற அமைப்புகளிலிருந்து வெளியேறியவர்கள்.

ஈழத்தின்மீது தமது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவுவதற்காக சக போராளிகளையே, தன் இன மக்களையே படுகொலை செய்யும் புலிகளின் பாசிசம்; இந்திய உளவு படையான "ரா"வுக்கு போராளிகளை அடகு வைத்ததோடு அதன் தூண்டுதலால் சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்த புலிகளின் தேசிய இனவெறி—இவை ஈழ விடுதலை இயக்கத்தைப் பல வீனப்படுத்திப் பின்னுக்குத் தள்ளுவதற்கான முக்கியமான காரணங்களாக அமைந்தன. இதனால் 1987 ஆரம்பத்தில் சிங்கள இன வெறி இராணுவம் முன்னேறித் தாக்கி ஈழத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிறுவிட முடிந்தது. பாசிச ராஜீவின் இராணுவ தலையீட்டிற்கு வாய்ப்பேற்பட்டது.

இப்போதும் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலின் மேலாதிக்கத்தின்கீழ் ஈழத்தின் ஏகப் பிரதிநிதியாகவும், ஏறக்குறைய 150 கோடி ரூபாய் விலையும் கோரும் புலிகளின் பேரம் தொடர்கிறது. இதை அடைவதற்காகவே சக போராளிகளைகொல்வதையும் புலிகள் மேற்கொள்ளுகின்றனர். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்று துரோகமிழைத்து விட்டவர்களையும் எதிரிகளின் உளவாளிகள்—கைக்கூலிகளையும் தான் அழித்தொழிப்பதாகப் புலிகள் புளுகுகின்றனர். சிங்களப் பேரினவாதத்தையும், இந்திய ஆக்கிரமிப்பையும் எதிர்க்கும் புரட்சிகர, ஜனநாயக சக்திகளைத்தான் முக்கியமாகப் புலிகள் தேடிக் கொல்கிறார்கள்.

இந்த உண்மைகளை புதிய ஜனநாயகம் எழுதுவதைக் கண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டித்து வெளிநாடுகளில் தஞ்சம்—புகுந்துள்ள குடியேறியுள்ள புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் அவ்வப்போது கடிதம்எழுதுகின்றனர் அவர்களில் எவருமே எமதுகுற்றச்சாட்டுகளுக்குத் துளியும் பதில் எழுதவில்லை. மாறாக புதிய ஜனநாயகத்துக்குப் பிரபாகரன் பாணியில் சவால் விடுவதும், பிரபாகரனின் தனிநபர் துதிபாடுவதாகவும் மட்டுமே உள்ளது. அதுமட்டுமல்ல, புலிகளுக்கு நிதி உதவி செய்வது பிரச்சாரம் செய்வது என்கிற பெயரில் இவர்கள் சில பண்பாடுகெட்ட வேலைகளிலும் இறங்கியுள்ளதாக அறிகிறோம். தமிழ்நாட்டிலே செல்லாக் காசுகளாகிவிட்ட சில ஒட்டுப் பொறுக்கிகள்—பிழைப்புவாதிகள் மற்றும் துணைநடிகை கற்பழிப்பு புகழ் பாண்டியன், ஆபாச நடிகை ஜெயமாலினி போன்றவர்களை அமெரிக்க—ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்து நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை என்ன? காலமும் காரணங்களும் பாசிச ராஜீவ் ஜெயவர்த்தனே கும்பலை வேகமாக விரட்டுகின்றன. இன்னும் ஒன்றரை ஆண்டு காலத்திற்குப் பல தேர்தல்களை அவர்கள் சந்தித்தாக வேண்டும். அதற்காக எவ்வளவு ஈழத் தமிழர்களை கொன்று குவித்தாலும் சரி, எவ்வளவு இந்தியப் படையினரைப் பலி கொடுத்தாலும் சரி என்று மூர்க்கமான போரில் அவர்கள் இமங்கி, மூன்றாவது சுற்றிவளைத்து நசுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைமைத் தளபதிகள் பலரும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். சமீப காலங்களில் கணிசமான அளவு இழப்புகள் நேர்ந்துள்ளதாகப் புலிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தங்களை மிகவும் அறிவார்ந்த அரசியல் மேதைகள் என்றும் திறமை வாய்ந்த இராணுவத் தளபதிகள் என்றும் பீற்றிக் கொள்ளும் பாலசிங்கம்—பிரபாகரன் தலைமையிலான புலிகள், இந்த நிலையிலும் பாசிச தேசிய இனவெறியில்தான் மூழ்கிக் கிடக்கிறார்கள். உல்கிலேயேநான்காவது பெரிய இராணுவத்தையும், அதற்கு ஆதரவான உலக வல்லரசுகளை எதிர்த்த போரில் சாத்தியமான அனைத்துச் சக்திகளின் ஆதரவு இன்றி வெற்றி பெற முடியாது என்கிற சாதாரண உண்மையையும் அறியாத—ஏற்க மறுக்கும் மரமண்டையர்களாக (DIEHARDS) இருக்கிறார்கள்.

சிங்களப் பேரினவாதத்தையும், இந்தியஇராணுவ ஆக்கிரமிப்பையும் ஆரம்பமுதல் உறுதியாக எதிர்த்து ஈழ மக்கள் விடுதலையில் பங்கேற்றும் ஆதரித்தும் வந்திருக்கின்றன இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள புரட்சிகர மற்றும் ஜனநாயக சக்திகள். விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான ஈழ மக்களின் போராட்டத்தில் பங்கேற்பதற்கான முழு உரிமையும் இவர்களுக்கு உண்டு. அதை மறுப்பதும் புரட்சிகர மற்றும் ஜனநாயகப் போராளிகளைக் கொலை செய்வதும் பாசிச ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பலுக்கு உதவுவதும் ஈழ மக்களுக்குத் துரோகமிழைப்பதுமாகும்.

● மாணிக்கவாசகம்

நன்றி: புதிய ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 ஒக்ரோபர் 1988 கலம்: 10

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி................ SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY
TEL. 0202-507156

கதைகளில்
வரும் பெயர்கள்
கற்பனையே.

ஆக்கதாரர்களே
அவர்களின்
ஆக்கங்களுக்கு
பொறுப்பாளிகள்.

© Nachdruck nur mit Genehmigung
des Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்